Registered as a Newspaper in Ceylon ** விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 79
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக சித்திரை 18 ஸபர் 1 செவ்வாய்க்கிழமை (30-4-68)

**அறிவித்தல்**

நெசவுத்தறி ஸ்தாபனத்தாருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

நெசவுத்தறி ஸ்தாபனத்தாரின் அன்ரூட பாவனைக்கு வேண்டிய நூல்களை சிறந்த முறையில் வேண்டியவாறு சாயம்போட்டுக் கொடுப்பதற்கு எங்கள் ஸ்தாபனம் முன்வந்துள்ளது இச் சேவையைப் பெறவிரும்புவோர் நேரிலோ அல்லது கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும்.

காரியதரிசி,
இலங்கை நூற்றல் நெய்தல் ஆலை,
(வரையறை) ஸ்தாபனம்.
வல்லை, உடுப்பிட்டி. 641

# "எம். பி. பதவியையும் துறப்பதே முறை



# தமிழினத்தைப் பாதுகாப்பது தனிப்பட்டவர் உடைமையல்ல"

## தீவுப்பகுதி எம். பி.க்கு தமிழரசு செயலாளர் பதில்

யாழ்ப்பாணம், செவ்வாய்

**தமிழினத்தைப் பாதுகாக்கும் அக்கறை திரு. நவரத்தினத்தின் தனி உடமையல்ல. கட்சியைத் தூற்றுவதைவிட்டு ஆக்கபூர்வமாகத் தனது துறையில் செய்யக்கூடிய பணியைச் செய்யுமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.**

**இவ்வாறு தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டை எம். பி.யுமான திரு. அமிர்தலிங்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கூறியுள்ளார்.**

எந்த அரசியல் இயக்கத்திலும் கருத்துவேற்றுமை இருப்பது சகஜம். ஆனால் அவற்றைக் கட்சிக்குள் விவாதித்து தீர்த்துக்கொள்வதுதான் முறை. மனச்சாட்சியின்படி அம்முடிவை ஏற்றுக்கொள்ள முடியாவிட்டால் கட்சியிலிருந்தும் கட்சிச்சார்பில் தான்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் ராஜினாமாச் செய்து மக்கள் தீர்ப்பைப்பெறுவதுதான் கண்ணியம். இவற்றுள் எதையும் செய்ய திரு. நவரத்தினம் தவறிவிட்டார் முறைப்படி கூட்டப்பட்ட பொதுக்காரியசபை ஏகமனதாக எடுத்த முடிவை ஏற்று நடக்கும் பெருந்தன்மை அவருக்கு ஏற்படுமென்று எதிர்பார்க்கிறேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடையாள அட்டை மசோதா காரணமாக ஏற்பட்ட வேறுபாடு காரணமாக கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் விடுத்த அறிக்கைக்கு திரு. அமிர்தலிங்கம் நேற்று ஓர் அறிக்கை மூலம் பதிலளித்தார்.



திரு. அமிர்தலிங்கம் தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

ஆள்பதிவு சட்டமூலம்சம்பந்தமாக நியமிக்கப்பட்ட கட்சி உபகுழுவில் திரு. வி. நவரத்தினம் ஒரு அங்கத்தவராக இருந்தும், பார்லிமெண்ட் குழுவை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் [illegible] நவரத்தினம் எவ்வித ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை ஆனால் 22-ம் திகதி பார்லிமெண்ட் குழுவில்மட்டும் ஆட்சேபனை தெரிவித்தார். முன்னரே இதனைப் பிரதமருக்குத்தெரிவித்திருக்கவேண்டுமென திரு. எஸ். ஜே. வி. தெரிவித்திருந்ததை திரு.

[8-ம் பக்கம் பார்க்க]

## கருவாட்டு லொறிக்குள் உயர் ரக சேலைகள்

### ஆனையிறவில் பொலிஸார் கைப்பற்றினர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

லொறியொன்றில் கருவாடுகளுக்குள் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டதாக கருதப்பட்ட உயர்ந்த ரக சேலைகளைப் பொலிசார் கைப்பற்றினர். இச்சம்பவம் ஆனையிறவு பொலிஸ் தடை முகாமில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குச் சென்று கொண்டிருந்த லொறியொன்றிலிருந்தே பொலிசார் இதனைக் கைப்பற்றினராம். லொறியுள் கருவாடுகளுக்கு மத்தியில் சேலைகள் ஒழித்து வைக்கப்பட்டிருந்தபோதே இதனைச் சோதனையிட்ட பொலிசார் இவைகளைக் கைப்பற்றினராம்.

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியிலுள்ள ஒரு வர்த்தக ஸ்தாபனத்துக்குச் சொந்தமானதெனக் கருதப்படும் கைப்பற்றப்பட்ட 65 சேலைகளும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர். [கா. நி.]

## 'கொலை' எச்சரிக்கை: பின்னர் தாக்கப்பட்டாராம்

### ஒருவர் தற்காலிக வேலைநீக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

கொலைசெய்யப்படப்போவதான பயமுறுத்தல் கடிதங்கள் கிடைக்கப்பெற்ற அரசாங்க ஊழியர் ஒருவர் இறுதியில் சிறு ஊழியர் ஒருவரால் தாக்கப்பட்டாராம். இச்சம்பவம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் நடைபெற்றதாக பொலிசுக்குச் செய்யப்பட்ட புகாரொன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

இங்கு கடமையாற்றும் ஓவர்ஸியரான அருமைநாயகம் என்பவரே தாக்குதலுக்குள்ளானவராவார். இவரை நள்ளிரவில் ஆஸ்பத்திரியில் அவர்கடமையாற்றிக்கொண்டிருக்கையில் தாக்கியதென்ற சந்தேகத்தின்பேரில் அருளானந்தம் என்ற அட்டண்டன்ட்ஒருவர் தற்போது வைத்திய சுப்பிரிண்டனால் தற்காலிகவேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவரைத்தாக்கிய அட்டண்டன்ட் உடனேயே ஆஸ்பத்திரியிலிருந்து ஓடிவிட்டதாகவும், பின்னர்தொடர்ந்து தலைமறைவாகவே இருந்துவருவதாகவும் பொலிஸ் விசாரணையில்தெரியவந்துள்ளது. தாக்குதலுக்குள்ளான அருமைநாயகத்துக்கு கொலை செய்யப்படப்போவதாக வந்த 3 பயமுறுத்தல் கடிதங்களும் பொலிஸ்சுப்பிரின்டனிடம் ஒப்படைக்கப்பட்டன.

பொலிஸார் புலன்விசாரணையை மேற்கொண்டுள்ளனர். சந்தேக நபர் இன்னும் கைது செய்யப்படவில்லை. [கா. நி.

## செவ்வாய்க் கிரகத்தில் தாவரவர்க்கங்கள்

மாஸ்கோ, ஏப். 29

செவ்வாய்க் கிரகத்திலசப்பாத்துக்கள்ளி போன்ற தாவரங்கள் இருக்கின்றன வென்றுசோவியத்வானவியல் ஆராய்ச்சி விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

செவ்வாய்க்கிரகத்தின் இருண்ட பகுதியில் இத்தாவரங்களைக் காணலாம் சோவியத் விஞ்ஞானி ஆராய்ச்சிமூலம் கண்டு பிடித்திருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

## இணைப்புக் குழு கூட்டங்கள்

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாண மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டம் எதிர் வரும் 20-ம்திகதியும் மாவட்ட விவசாய இணைப்புக் குழுக் கூட்டம் 21-ம் திகதியும் யாழ்ப்பாணம் செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா தலைமையில் நடைபெறவிருக்கின்றது. [...]

## "பதவியிலிருந்து விலக வேண்டாம்"

### தீவுப்பகுதி எம். பி.க்கு அனலைதீவு வாலிபர் கோரிக்கை

அனலைதீவு, திங்கள்

எம். பி. பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டாம் என்று அனலைதீவு முற்போக்கு வாலிபர் இயக்கத்தினர் தீவுப்பகுதி எம். பி திரு. வி. நவரத்தினத்தைக் கேட்டுள்ளனர்.

வாலிபர் இயக்க செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் அவரைப் பேட்டிகாணச் சென்ற இயக்கத் தலைவர் திரு பே. கணபதிப்பிள்ளையையும், பொதுச் செயலாளரும் அவரிடம் சமர்ப்பித்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## மே 2-ல் வர்த்தக ஊழியர் வேலைக்குத் திரும்புவர்

கொழும்பு, திங்கள்

**இலங்கை வர்த்தக ஊழியர் சங்க அங்கத்தினர் மே மாதம் 2-ம்திகதி வேலைக்குத் திரும்புவர்.**

வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதென்று இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் நேற்று முன்தினம் தீர்மானித்தது அத்தீர்மானம் இன்று டி மெல் பார்க்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

துறைமுகக் கூட்டுத்தாபனத் தலைவருக்கும் வர்த்தக ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் ஏற்பட்ட உடன்படிக்கையைத்தொடர்ந்து வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதென்று சங்கம் முடிசெய்தது வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதற்கான உடன்பாடுகள் எழுத்தில் கிடைக்கும்வரை பொறுத்திருந்து மே மாதம் 2-ம்திகதி வேலைக்குத் திரும்ப ஊழியர்கள் முடிவுசெய்துள்ளனர்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் வேலைநிறுத்தத்தைக் கைவிடத் தீர்மானித்த செய்தியை நேற்று 'ஈழநாடு' மட்டுமே வெளியிட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

தமிழ் நாடகக் குழு,
இலங்கைக்
கலைக் கழகம்
நாடகசாலைகளுக்கான
நாடகப்போட்டி, 1968
இறுதித் திகதி
3-5-1968
விபரங்களுக்கு
செயலாளர்,
இலங்கைக் கலைக் கழகம்,
135, தர்மபால மாவத்தை,
கொழும்பு 7.
என்ற முகவரிக்கு எழுதவும்.
688

## அறிவித்தல்

புகைப்புகையிலை வைத்திருப்பவர்களிடமிருந்து கொள்வனவு செய்ய ஒழுங்கு செய்துள்ளோம். கிட்டங்கி முறைப்படி பணம் பெற விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மருவராயர் கிட்டங்கி,
அறை நம்பர் 41, முன்வீதி,
யாழ்ப்பாணம்.

கு. சி. கந்தையா,
முருகமூர்த்தி கோயிலடி,
நாவடி, கொக்குவில்.
708

## மலைநாடு செல்கின்றனர்

குரும்பசிட்டி, திங்கள்
தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம், சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம், செனட்டர் எஸ். நடராசா ஆகியோர் மே தின விழாவில் கலந்து கொள்வதற்கு மலையகம் செல்கின்றனர்.

தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கும் இலங்கைத் தொழிலாளர் கழகம் பொகவந்தலாவையில் நடாத்தும் மேதின விழாவில் இவர்கள் பங்கு பற்றி உரையாற்றுவர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 30-4-68**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை — கே. அருணாசலதேசிகர், 6-40 இஸ்லாமியநற்சிந்தனை — எம். ஏ. எஸ். முகமது, 6-45 துதிப் பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அன் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்சேவை.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சதம்பஇசை.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி, 6-45 வானவளம், 7-00 சிராமசஞ்சிகை, 7-30 கருத்துமேடை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — ரூம். குமாரசாமி.

## சிரமதானம்

யாழ்ப்பாணம், செவ்.
மண்டைதீவு மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் எதிர் வரும் 3-ம் திகதி சிரமதானம் மூலம் அமைக்கப்படவிருக்கிறது. ஊர்காவற்றுறை எம். பி. திரு வி. என். நவரத்தினம் தலைமையில் இச்சிரமதானம் நடைபெறும். திரு நவரத்தினம்கட்சியிலிருந்து விலக்கப்பட்டபின்னர் தமதுதொகுதியில் கலந்து கொள்ளும் முதல் வைபவம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது!
(கா. நி.)

கடனுதவி மூலம் இயந்திரப்படகுகள்

# வடபகுதி மீனவருக்கு விரைவில் கிடைக்கும்

காங்கேசன்துறை, திங்.
வடபகுதி மீனவர்களுக்கு மீன்பிடி இலாகாவினால் கடனுதவி மூலம் கொடுக்கப்படவிருக்கும் இயந்திரப்படகுகள் சம்பந்தமான விசாரணைகள் இன்று பருத்தித்துறை மீன்பிடி இலாகாகாரியாலயத்தில் நடைபெற்றது.

அகிலஇலங்கையிலும் 250 இயந்திரப்படகுகள் இவ்விதகடனுதவிமூலம்கொடுக்கப்படவிருக்கின்றன. ஒவ்வொரு இயந்திரப்படகின் பெறுமதியும்17,500 ரூபாவாகும்.

வடபகுதி மீனவர்களுக்கு 15 இயந்திரப்படகுகளும் இவற்றுள் மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறை ஆகிய இடங்களுக்கு நான்கு இயந்திரப்படகுகளும்கொடுக்கப்படவிருக்கின்றன.

இவ்வருட முற்பகுதியில் இயந்திரப்படகுகளுக்குவிண்ணபித்தவர்களுக்கு மட்டுமே இன்று பருத்தித்துறை மீன்பிடிக் காரியாலத்தில் விசாரணை நடைபெற்றது.

கொலை முயற்சி வழக்கு

## எதிரிகள் விடுதலை

குரும்பசிட்டி, திங்கள்
சங்கானையைச் சேர்ந்த கந்தன் செல்லத்துரை என்பவரை இவ்வருடம் பெப்ரவரி மாதம் 2-ந் திகதி துப்பாக்கியினால் சுட்டுக் கொலை செய்ய எத்தனித்ததாக எம். திருவாதிரை, கே. மகேந்திரன் ஆகிய இரு வாலிபர்களின் மேல் சங்கானைப் பொலிசாரால் தொடரப் பட்டிருந்த வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது காயப்பட்டவரை பரிசோதனை செய்த வட்டுக்கோட்டை வைத்திய அதிகாரி டாக்டர் என். பதமநாதன், காயமடைந்த செல்லத்துரை, மனைவி பொன்மணி, பொலிஸ் கான்ஸ்டபிள் சுபசிங்கா ஆகியோர் சாட்சியமளித்த பின்னர் எதிரிகள் இருவரையும் நீதிபதி விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

## மாதர்சங்க தீர்மானங்கள்

கோண்டாவில், திங்கள்
கோண்டாவில் பகுதிக்கு பிறப்பு, இறப்பு, கலியாணப் பதிவுகாரர் இதுவரை நியமிக்கப்படவில்லை. விரைவில் இப்பகுதிக்கு ஒருவரை நியமிக்க வேண்டுமென்றும் இப்பகுதிக்கு பாலர்விடுதி ஒன்று அமைத்துதவும்படியும் கோரும் தீர்மானங்கள் கோண்டாவில் வடக்கு மாதர் கிராமமுன்னேற்றச் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது, யாழ் அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகராவிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மற்றும் கோண்டாவில் பகுதிக்கு விரைவில் மின்சாரம் வழங்கும்படி கொக்குவில் கிராமசபையைக் கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத் தீர்மானங்களடங்கிய மகஜர் உள்ளூராட்சிஅமைச்சருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் வடக்கு அரசினர் நெசவு நிலையத்தில் மேற்படி மாதர்சங்கக் கூட்டம் திருமதி நடேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. மத்திய கிராமமுன்னேற்றச் சங்கக் காரியதரிசி திரு. கே. பி. சுந்தரலிங்கம் மாதர்சங்கமும் அதன் பணியும் என்னும் பொருள்பற்றி பேசினார். காரியதரிசி திருமதி குணேஸ்வரி துரைராஜா நன்றி கூறினார்.

## டாக்டரே மருந்து கலக்கிறார்

கொடிகாமம், திங்கள்
கொடிகாமம் அரசினர் கிளைவைத்தியசாலையில், டாக்டரே மருந்து கலக்கும் வேலையைச் செய்துவருவதால் நோயாளர்கள் பல மணிநேரம் தாமதிக்க வேண்டியிருக்கிறது.

ஏற்கனவே இவ்வைத்தியசாலையில் கடமையாற்றிய மருந்துகலப்பவரின் சேவை நிறுத்தப்பட்டதை தொடர்ந்தே இந்நிலைமை ஏற்பட்டன.

கர்ப்பிணிகளை பரிசோதிக்கும் நாட்களில் மருந்து கலப்பவர் இல்லாததால், அவர்களுக்கு கலவை மருந்து கொடுக்கப்படுவதில்லையென்றும் குளிகைகள் மட்டுமேவழங்கப் படுவதாகவும் தெரியவருகிறது.

இந்நிலைகாரணமாக இப்பகுதியிலுள்ள நோயாளர் சிகிச்சை பெறுவதற்கு சாவகச்சேரி வைத்தியசாலைக்கு செல்கின்றனர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, இரண்டாம் ஒழுங்கையில் நவீன முறையில் அமைக்கப்பட்ட வீடும் இரண்டரை பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. இதன் விபரத்தை யாழ்ப்பாணம் சுண்டிக்குழி வஸ்தியாம்பிள்ளை புத்தகக்கடையில் வேலை பார்க்கும் நடராசா என்பவரிடம் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி 695. 1456

EN 3724, B.S.A. 250 CC மோட்டார் சயிக்கிள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில் வரவும். A.K இராசதுரை, நெசவு ஆசிரியர், புத்தூர்ச்சந்தி, கொடிகாமம். 1458

### காணவில்லை

கச்சாய் திரு. சிதம்பரப்பிள்ளை தருமலிங்கத்தின் உழவு இயந்திரம் செலுத்துவதற்கான அனுமதிப் புத்தகமும் இன்சூரன்ஸ் பத்திரமும் வரிப்பத்திரமும் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தோர் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்திற்கு தபால் மூலம் அனுப்பினால் பெரும் உதவியாக இருக்கும்.
1457

### கல்வி

வகுப்புக்கள்

ஜி. சி. ஈ. உயர்தரம் (A. L.) கலை / விஞ்ஞானம் சாதாரண தரம் (O. L.) கலை / விஞ்ஞானம்; வர்த்தகம் ஆகிய வகுப்புக்கள் ஆங்கிலம் / தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. விண்ணப்பங்கள் 10-5-68 திகதிக்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா. யாழ்ப்பாணக் கல்வி நிலையம் (The Jaffna Education Centre) 304/3, ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1453

### உயர்கலைக் கல்லூரி யாழ்ப்பாணம்

ஜி.சி.ஈ. உயர்தரம் கலை/விஞ்ஞான வகுப்புகள் ஜி சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞான வகுப்புகள் ஜி. சி. ஈ. ஆரம்பவகுப்புகள் வர்த்தக வகுப்புக்கள் ஆகியன ஆங்கில மூலமும் தமிழ் மூலமும் போதிக்கப்படும். உடன் மனுச் செய்யவும்.
இங்ஙனம்
பதிவாளர்
644

இன்றுமுதல் திரையிடப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
மொடேர்ன் (பதுளை) — விஜிதா (மஸ்கேலியா)



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே. ஆர். விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
# சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)

**MANOHARA**
JAFFNA
9-45 P. M. Show only
**LOVES OF HERCULES**
2-30, 6-30 P. M.
வள்ளியின் செல்வன்

**REGAL** JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P.M.
MarlonBrando, Sophia Loren
in
**A Countess From Hong Kong**

**RAJAH**
JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
**It's A Woman's World**
(Technicolor & Scope)
(Adults only)

நவாலியூர்
பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியக்குருக்கள் அவர்கள்
கூறுகிறார்கள்!
**சுந்தரம் பிறதர்ஸ்**
ஸ்தாபனத்தாரால் விநியோகிக்கப்படும்
# பச்சைசந்தனம்
கோவில் தேவைகட்கும்
மற்றும் மங்களக் காரியங்களுக்கும் சிறந்தது.
இறைவன் திருமேனியில்
**சந்தனக் காப்பிட்டு**
அவனின் திருவருளைப் பெறுவதற்கும்
சிறந்த வஸ்துவாக அமைகிறது.
**சுந்தரம் பிறதர்ஸ்**
(கோவில் அபிஷேக திரவிய வியாபாரிகள்)
73, மின்சாரநிலையவீதி—யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியட்னும் பூர்வாங்கப் பேச்சுக்கள்

# வட வியட்னும் விரும்பும் வார்ஸோ, நாம்பென் இரண்டையும் அமெரிக்கா நிராகரித்தது

## 'அவை பாரபட்சமற்ற சூழ்நிலைக்கு உகந்த இடங்களல்ல'

வாஷிங்டன், ஏப்ரல் 29

**வியட்னும் சமாதான பூர்வாங்க ஆலோசனைகள் நடத்துவதற்குத் தமக்குப் பிடித்தமான இடங்கள் என வட வியட்னும் தெரிவித்துள்ள போலிஷ் தலைநகரான வார்சோவையும், கம்போடியத் தலைநகரான நாம் பென்னையும் அமெரிக்கா திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.**

நேற்று, இங்கு பத்திரிகையாளரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், தூர கிழக்கு விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி ராஜாங்க காரியதரிசி, திரு. வில்லியம் மண்டே, இவ்வறிவித்தலை வெளியிட்டார்.

**காரணம்**

வார்ஸோவும், நாம் பென்னும் பேச்சுவார்த்தைகளைப் பாரபட்சமற்ற சூழ்நிலையில் நடத்துவதற்கு உகந்த இடங்களல்ல என்று அமெரிக்கா கருதுவதே இந்த நிராகரிப்புக்குக் காரணம் என்று திரு மண்டே மேலும் தெரிவித்தார்.

போலிஷ் தலைநகர் வார்ஸோ பற்றி அவர் குறிப்பிடுகையில், நடுநிலைமை குறைந்த இடமாக அது இருப்பதாகக் கூறினுர். இதற்கு ஆதாரமாக, வட வியட்னுமுக்குப் போலாந்து அளித்து வந்துள்ள இராணுவ உதவியை அவர் சுட்டிக் காட்டினுர்.

## அலஹபாத் நிலைமை

அலஹபாத், ஏப்ரல் 29

அலஹபாத்தில் அண்மையில் நடைபெற்ற வகுப்புக் கலவரங்களைத் தொடர்ந்து சந்தைகள், கடைகள் யாவும் இப்போது திறக்கப்பட்டுள்ளன. மாமூல் நிலைக்கு நகர் திரும்பி வருவதே இதற்குக் காரணமாகும்.

கடந்த இரவு, ஊரடங்குச்சட்டம் மீண்டும் பிறப்பிக்கப்பட்டது. இன்று, ஊரடங்குச்சட்டம், இரவு 8 மணிவரை தளர்த்தப்பட்டுள்ளது.

பொலிசார், நேற்று, அபாயகரமான வெடிமருந்துகளை ஓரிடத்தில் கண்டுபிடித்தனர். இதுசம்பந்தமாக இருவரை அவர்கள் கைதுசெய்துள்ளனர்.

அலஹபாத் கலவரங்கள் சம்பந்தமாக இதுவரை மொத்தம் 700 பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

## இங்கிலாந்தில் கறுப்பர்கள் இயக்கம் உருவாகியது

லண்டன், ஏப்ரல் 29

இங்கிலாந்திலுள்ள 20 குடியேற்றவாசிகள் நிறுவனங்களின் தலைவர்கள், இன ஒதுக்கல் கொள்கையை எதிர்த்துப் போராடுவதற்கென இங்கு இணைந்துள்ளனர். இந்த இணைப்பு நிறுவனம், 'கறுப்பு மக்கள் இயக்கம்' என அழைக்கப்படும்.

இங்கிலாந்திலுள்ள பத்து லட்சத்துக்கும் அதிகமான குடியேற்றவாசிகளின் நலன்களை இந்நிறுவனம் கவனிக்கும். இவர்களில் பெரும்பான்மையோர் இந்திய, பாகிஸ்தானிய, ஆபிரிக்க மக்களாவர்.

**லண்டனில் ஆர்ப்பாட்டம்**

இதற்கிடையில், லண்டனில் நேற்று 2,000க்கும் அதிகமான மக்கள் அண்மையில் கன்சர்வேடிவ் தலைவர்களில் ஒருவரான திரு. பவல் இனக் கலவரங்களைத் தூண்டும் வகையில் பேசியதை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## திரு. பவல் பேச்சை எதிர்த்து கனடாவில் ஆர்ப்பாட்டம்

ஒட்டாவா, ஏப்ரல் 28

இங்கிலாந்துக்குக் கறுப்பு மக்கள் வந்து குடியேறுவதை வெகுவாகக் கண்டித்துப் பேசிய கன்ஸர்வேடிவ் கட்சித் தலைவர் திரு. பவல் கனடாவுக்கு விஜயஞ்செய்துள்ளார்.

அங்கு, அவர் தங்கியுள்ள ஹோட்டலுக்கு வெளியே, அவருடைய இனவெறிப் பேச்சை ஆட்சேபித்து மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

## பாரிஸில் பொலிசாருடன் மாணவர் கடும் மோதல்

பாரிஸ், ஏப். 29

பிரெஞ்சுத் தலைநகரான பாரிஸில், வியட்னும் போர் சம்பந்தமாக, மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே நேற்றுப் பலத்த மோதல்கள் ஏற்பட்டன.

வியட்னும் போரில் தென் வியட்னுமிய போர்வீரர் பங்குபற்றும் படங்களைக் காண்பிக்கும் கண்காட்சியொன்றின் போதே, இம் மோதல்கள் நடைபெற்றன.

இரும்புக் கம்பிகள், தடிகள், கற்கள் இவற்றுடன், கண்காட்சி நடைபெறும் இடத்துக்கு வெளியே கூடிய மாணவர்களுக்கும், அங்கு வந்த பொலிசாருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது.

கண்காட்சி நடந்த இடத்தில், மாணவர்கள் கற்களை வீசியதன் விளைவாக, பார்வையாளர்கள் சிலர் காயமுற்றனர்.

## கச் தீர்ப்பு எதிர்ப்பாளர் 66 பேர் கைது

புதுடில்லி, ஏப்ரல் 29

ரன் ஒவ் கச் தீர்ப்பை எதிர்த்து, அங்கு தடுக்கப்பட்டுள்ள பிரதேசத்தினுள் பிரவேசிக்க முயன்ற 66 பேரை இந்தியப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

அவர்கள் பின்னர், நீதிமன்ற விசாரணையின்போது 7 நாள் சாதாரண சிறைத் தண்டனையும், ரூ. 25 அபராதமும் விதிக்கப்பட்டனர்.

## யூகோ. ஜனதிபதி டிட்டோ மாஸ்கோ வந்து சேர்ந்தார்

### கம்யூனிஸ்ட் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி ஆலோசனை

மாஸ்கோ, ஏப்ரல், 29

யூகோஸ்லாவிய ஜனதிபதி திரு. டிட்டோ, மாஸ்கோ வந்துசேர்ந்துள்ளார். மொங்கோலியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு, ஜனதிபதி டிட்டோ இன்று ரஷ்யத் தலைநகர் வந்து சேர்ந்தபோது, ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி திரு. பிரெஷ்னெவும், அதிபர் திரு. பொட்கோர்னியும் அவரைச்சந்திக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தனர்.

மாஸ்கோவில், ரஷ்யத் தலைவர்களுடன் யூகோஸ்லாவிய ஜனதிபதி டிட்டோ நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தைகளின் போது, விரைவில் மாஸ்கோவில் நடத்துவதற்கெனத் திட்டமிட்டுள்ள உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகள் உச்சி மகாநாட்டில் யூகோஸ்லாவியாவும் கலந்துகொள்வதுபற்றி ஆராயப்படுமெனக் கூறப்படுகிறது.

இப்போது, ஹங்கேரித் தலைநகரான புடாபெஸ்டில் நடைபெறும் உலகக் கம்யூனிஸ்ட் நாடுகள் மகாநாட்டில் யூகோஸ்லாவியா பங்குபற்றவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனதிபதி டிட்டோ, இன்றுமாலை அல்லது நாளைக் காலை, தாயகம் புறப்படுவாரெனத் தெரிகிறது.

புடாபெஸ்ட், ஏப். 29

புடாபெஸ்டில் கூடியுள்ள உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகள், ஓர் இணைப்பறிக்கை ஒன்று தயாரித்துக்கொண்டிருக்கின்றன.

இந்த அறிக்கையில், மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் உத்தேச உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகள் உச்சி மாநாட்டின் தேதி மற்றும் விபரங்கள் வெளியிடப்படுமென மாநாட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புடாபெஸ்டில் நடைபெறும் மாநாட்டுக்குச் சமுகமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த 87 நாடுகளில், 55 நாடுகள் மட்டுமே மாநாட்டுக்குத் தமது பிரதிநிதிகளை அனுப்பின.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ருமேனியா, அல்பேனியா, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகள் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

சீனுவும்மற்றும் சில ஆசிய நாடுகளும், கியூபாவும் புடாபெஸ்ட்மாநாட்டைப் பகிஷ்கரித்துள்ளன.

## இந்தியாவுக்கும் எதியோப்பியாவுக்குமிடையே நிலவும் பொதுவான உடன்பாடுகள்

### மன்னர் ஹெயிலிசலாஸியும் டாக்டர் ஹுசெயினும் வலியுறுத்தினர்

புதுடில்லி, ஏப். 29

நேற்றிரவு, இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள எதியோப்பிய மன்னர் ஹெயிலி சலாஸிக்கு இந்திய ஜனதிபதி டாக்டர் சாகீர் ஹுசெயின் விருந்துபசாரமொன்று நிகழ்த்தினுர்.

அந்த விருந்துபசாரத்தில் பேசுகையில், இந்திய ஜனதிபதியும் எதியோப்பிய மன்னரும், இரு நாடுகளுக்குமிடையேயான பொது நோக்கங்களை வலியுறுத்தினர்.

அத்துடன், தென்னுபிரிக்காவின் இனவெறிக் கொள்கையையும், ரொடீஷியா, போர்த்துக்கேய காலனிகளில் ஆபிரிக்கர்கள் மனிதத்தன்மையற்ற முறையில் நடத்தப்படுவதையும் இரு தலைவர்களும்கண்டித்தனர்.

ஒடுக்கப்பட்டுள்ள ஆபிரிக்க மக்களின் போராட்டம் அவர்களுக்குச் சுதந்திரம் கிடைக்கும் வரை, தொடர்ந்து நடத்தப்படுமென எதியோப்பிய மன்னர் தமது உரையில் வலியுறுத்தினுர்.

இந்திய ஜனதிபதி டாக்டர் சாகீர் ஹுசெயின் பேசுகையில், ஒடுக்கப்பட்ட ஆபிரிக்க மக்களின் சுதந்திரத்தை ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் அளிக்கத் தவறின், அம் மக்கள் பலாத்காரத்தில் ஈடுபடுவதற்கே தூண்டப்படுவர் என்று குறிப்பிட்டார்.

**மன்னருக்குப் பாராட்டு**

ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமைக்குப் பெரிதும் பாடுபடும் ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமை நிறுவனத்தின் வெற்றிக்கு எதியோப்பிய மன்னரே முக்கிய காரணகர்த்தராவர் என்று டாக்டர் ஹுசெயின் பாராட்டினுர்.

வெளிநாட்டுக் கொள்கையில், இரு நாடுகளும் நடுநிலைமைக் கொள்கையை அனுஷ்டிப்பது குறித்து இரு தலைவர்களும் குறிப்பிட்டனர்.

இந்தியாவுக்கும், எதியோப்பியாவுக்குமிடையே வர்த்தக ஒப்பந்தமொன்றும், விஞ்ஞான, கலாச்சார, தொழில் நுட்ப உடன்படிக்கையொன்றும் [illegible] கைச்சாத்திடப் [illegible] கின்றன.

## ஓய்வு பெறும் பாகிஸ்தான் தூதுவர் ஷேக் அப்துல்லா சந்தித்தார்

புதுடில்லி: ஏப். 29

இந்தியாவில் பாகிஸ்தான் தூதுவராகக் கடமையாற்றி இப்போது ஓய்வு பெற்றுத் தாயகம் திரும்பும் திரு அர்ஷாத் ஹுசெயின் நேற்று முன்னுள் காஷ்மீர் பிரதமர் திரு ஷேக் அப்துல்லா சந்தித்துப் பேசினுர். இச் சந்திப்பு, நான்கு மணி நேரம் நீடித்தது.

## பெர்மூடாவில் கலவரம்

பெர்மூடா, ஏப். 29

பிரிட்டிஷ் காலனியான பெர்மூடாவில், கடந்த 3 நாட்களாகத் தொடர்ந்து கலவரங்கள் நடந்துள்ளன.

இக்கலவரங்களை அடக்குமுகமாக, பெர்மூடா கவர்னரின் [illegible] இணங்க, பிரிட்டிஷ் துருப்புகள் அங்கு அனுப்பப்பட்டுள்ளன.

## மலேஷியாவில் பர்மியத் தலைவர் நீ வின்

கோலாலம்பூர், ஏப்ரல் 29

பர்மாவின் புரட்சிக் கவுன்சில் தலைவரான ஜெனரல் நீ வின், தமது மலேஷிய விஜயத்தை முடித்துக் கொண்டுள்ளார்.

நீ வின்னும், மலேஷியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மானும் தமது பேச்சுவார்த்தைகளின் முடிவில், வெளியிட்டுள்ள இணைப்பறிக்கை ஒன்றில், தென்கிழக்காசிய நாடுகள் தமது சுதந்திரத்தையும், சுய நிர்ணயத்தையும் காப்பாற்றி வைத்துக் காப்பதுடன் தமது பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதமாக்கவும் உறுதி கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழகத்தில் மோதல்கள்

பீகிங், ஏப்ரல் 29

பீகிங் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டதாகப் பீகிங் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாசே துங்கின் போதனைகளைப் படிப்பிக்கும் விஷயத்திலேதான் மோதல்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கடவுளை உணரவேண்டுமானல் எல்லாச் சமயப் புத்தகங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு கடவுளைப்பற்றியே நினையுங்கள்! அந்தத் தெய்வீக உணர்ச்சியை எந்த நாளும் சரிவர விளக்க முடியாது. அந்த உறவு ஏற்பட்டுவிட்டால் பந்தங்கள் நீங்கவும் பேரின்பமும் தெய்வீக சாந்தியும் ஏற்படவும் முடியும்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrm: EELANAD
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் கீலகவருஷம் சித்திரைமாதம் 18ந் திகதி
(30-4-68)


## பிரஜாவுரிமை

இலங்கை-இந்திய ஒப்பந்தச் சட்டம் அமுல் படத் தொடங்குகிறது. இலங்கை-இந்திய அரசாங்கங்கள் தங்களது பிரஜாவுரிமையைப் பெற நாடற்ற மக்களிடமிருந்து மனுக்களைக் கோரியிருக்கின்றன. இரு அரசாங்கங்களும் தாங்கள் செய்துகொண்ட ஓர் ஒப்பந்தத்தை அந்த ஒப்பந்தம் செய்துகொண்ட அதே உணர்ச்சியுடன் அமுல் நடத்த முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்ட வேண்டியது.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரின் எண்ணிக்கை ஒன்பதுலட்சத்து எழுபதினையாயிரம் என்ற மதிப்பீட்டின்படி செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஐந்தேகால் லட்சம் இந்திய வம்சாவழியினருக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்கி இந்தியர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டியது இந்திய அரசாங்கத்தின் பொறுப்பு. மூன்று லட்சம் இந்திய வம்சாவழியினருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க வேண்டியது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு. மிகுதி ஒன்றரைலட்சம் மக்கள் பற்றிப் பின்னர் தீர்மானிப்பதென இருதரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர். பிரஜாவுரிமை கோருபவர்கள் எப்படி மனுச்செய்ய வேண்டும், என்னவிபரங்கள் தெரிவிக்கவேண்டும், யார் யார் மனுச்செய்யலாம் என்பது பற்றி இரு நாட்டு அரசாங்கங்களும் தகவல்கள் வெளியிட்டுள்ளன. ஆயினும் சில தகவல்கள் சரியான விளக்கத்தைத் தரவில்லை. 'நாடற்றவர்' என்ற பிரச்னைதான் இருநாட்டு அரசாங்கங்களுக்கும் பெரும் தலைவலியைக் கொடுத்து வந்தது. 'நாடற்றவர்' என்ற ஒரு புதிய இனம் இருக்கக் கூடாது என்பதுதான் இந்த ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கம். இது மனிதர் சம்பந்தப்பட்ட பிரச்னையானதால் மனிதாபிமானத்துடன் இதற்குத் தீர்வு காணப்படவேண்டியது அவசியம். இந்த ஒப்பந்தச் சட்டத்தை அமுல் செய்யும்பொறுப்புடைய அதிகாரிகள் இதை மனதில் கொண்டு மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

இலங்கையர்களை மணந்து குடும்பமாக இங்கு வசிப்பவர்களுக்கும், நீண்டகாலமாக இலங்கையில் வசித்துவருபவர்களுக்கும், குடும்பத்தில் சிலர் இலங்கைப் பிரஜைகளாக இருந்து இலங்கைப் பிரஜைகளாக இல்லாமலிருக்கும் மற்றவர்கள் ஆகியவர்கள் விஷயத்தில் இலங்கைப்பிரஜாவுரிமை வழங்குவதில் முதலிடம் கொடுக்கப்படுமென்று கூறப்படுகிறது. இலங்கையரை மணந்தவர்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை கொடுப்பதும் இந்த ஒப்பந்தத்துக்குட்படவேண்டுமா? இந்த ஒப்பந்தம் செய்யப்படாவிட்டால் இலங்கையரை மணந்தகணவனோ, மனைவியோ பிரஜாவுரிமை வழங்கப்படாமல் குடும்பம் பிரிக்கப்பட வேண்டியதுதானா! இலங்கையரை மணந்தவர்களுக்குபிரஜாவுரிமை வழங்குவதில் இந்த ஒப்பந்தத்தைச் சம்பந்தப்படுத்துவதில் நியாயமிருப்பதாகத் தெரியவில்லை. இதுதவிர இலங்கையர் என்பதை இலங்கையர் அனைவரும் தஸ்தாவேஜுகள்மூலம் நிரூபிப்பதென்பது எல்லோருக்கும் சுலபமல்ல அதாவது 'நீர் வம்சாவழி இலங்கையரானல் உமது தந்தை, தந்தையின் தந்தை, தந்தையின் தந்தையின் தந்தை ஆகியோர் இலங்கையில் பிறந்தவர்கள் என்பதற்கு தஸ்தாவேஜுகள் மூலம் நிரூபிக்க முடியுமா?' என்றகேள்விகளுக்கு எல்லோரும் சரியான பதிலளித்து நிரூபிக்க முடியுமா? வம்சாவழி இலங்கையர் தமது பிரஜாவுரிமையை நிரூபிப்பதில் உள்ள கஷ்டங்களை நீக்குவதுபற்றிஆராய்ந்த கமிஷன் தெரிவித்த சிபாரிசுகளையும் இந்த ஒப்பந்தம் அமுல் செய்கையில் கவனித்துக் கொள்வது அவசியம்.

'நாடற்றவர்' என்றஓர் இனம் இருக்கக்கூடாது. இதுவே ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கம். பிரஜாவுரிமை வழங்குவதற்கு இப்போதுகொண்டு வரப்பட்டுள்ள ஒப்பந்த அமுல் சட்டமும் இதுதான் ஆனால் சட்டத்துக்காக மக்கள் அல்ல; மக்களுக்காகத்தான் சட்டம் என்பதை நினைவில் வைத்து எவருக்கும் வீண் துன்பமும் தொல்லையும் கொடுக்காமல் சுமுகமாக ஒப்பந்தம் அமுல் செய்யப்படவேண்டும்.

# அடையாள அட்டை இல்லாவிட்டால் 'எனக்கு மூன்று எலும்பு முறியக்கூடும்'

**[அடையாள அட்டை வழங்கும் 'ஆட்களைப் பதிவு செய்தல் மசோதா' சம்பந்தமாக தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் நாடாளுமன்றத்தில் செய்த பிரசங்கத்தின் தொடர்ச்சி கீழ் தரப்படுகிறது]**

இம் மசோதா இந் நாட்டு மக்கள் எல்லோரையும் பாதிக்குமென்பது வெளிப்படை. அது எந்த ஒரு சமுதாயத்தையும் குறிப்பிடவில்லை. பிரஜாவுரிமை சட்டமும் இப்படித்தான் முதலில் எந்த ஒரு சமுதாயத்தையும் பாதிக்காதது போலத் தெரிந்தது. 20 வருடங்களுக்குப் பிறகு அதன் விளைவை நாம் அறிவோம். ஒரு தமிழன் கொழும்பில் காணி வாங்க விரும்பினல் அந்த உறுதி காணிப்பதிவுக்கந்தோருக்கு அனுப்பப்படுகிறது. ஆனல் வாங்குபவர் தமிழன் என்ற காரணத்துக்காக காணிப் பதிவு அதிகாரி அதைப் பதிவு செய்ய மறுக்கலாம். ஆயிரக்கணக்கான உறுதிகள் இவ்விதம் பதிவுசெய்ய மறுக்கப்பட்டுள்ளன. ஏன்? வாங்குபவர் தமிழன் என்பதற்காக.

திரு. நீல் டி அல்விஸ்: நீங்கள் இந்த அரசாங்கத்தை ஏன் சகித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

திரு. நவரத்தினம்: அது தான் விசித்திரம்! நான் இம் மசோதாவை எதிர்ப்பதேன் என்றல் அது தமிழ் பேசும் மக்களுக்குத்தான் பெரிய குழப்படிசெய்யப் போகிறது.

மசோதாவின் 27-வது பிரிவுதான்மோசமானதென்றும் அதை எடுத்துவிட்டால் மசோதா சரியானதென்றும் யாழ்ப்பாணப் பிரதிநிதி கூறுகிறர். அவர் மசோதாவை சரியாகப் பரிசீலனை செய்யவில்லையென்று நான் நினைக்கிறேன் சிரேஷ்ட வழக்கறிஞர்களுக்கு நான் அடிபணியத்தான்வேண்டும் ஆனல் எனக்கும் கொஞ்சம் சட்டம் தெரியும். 27-வது பிரிவ எடுத்துவிட்டால் மட்டும் எமக்கு எவ்வித பலனும் இல்லை. இப் பிரிவு ஓர் இரட்டைக்குழல் துப்பாக்கியின் ஒருகுழல் போன்றது.

இப்பொழுது இம் மசோதாவின் 2-ம் பிரிவை எடுத்துக்கொள்வோம். இதன் படிக்கு ஒரு குறிப்பிட்ட திகதிக்கு முன்னரோ பின்னரோ இலங்கையில் பிரவேசிப்பவர்கள் தங்களை பதிவுசெய்துகொள்ளவேண்டும் அதாவது பதிவுக்கு விண்ணப்பம்செய்யும்போது இந்நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் ஒரு 'கள்ளத் தோணி' என்றே கருதப்படுவர். தமிழர்கள் மட்டுமல்ல, எல்லோருமே.

ஒருவர் தாம் இலங்கைக்கு கள்ளத்தனமாக பிரவேசிக்கவில்லையென்று பதிவு விண்ணப்பப்பத்திரத்தில் உறுதிப்படுத்தவேண்டும். பதிவுஅதிகாரி அதற்கு தக்கசான்று தரும்படி வற்புறுத்துவார், இப்பத்திரத்தில் கூறப்படும் விபரங்களை அத்தாட்சிப்படுத்தும்பொறுப்பு விண்ணப்பதாரருடையது என்று 31-ம் பிரிவு கூறுகிறது.

ஆகையால் சட்டப்படி எவரும் தான் பதிவுக்கு தகுதியானவர் என்று சான்றுகாட்ட வேண்டும். அதாவது, 50 வருடங்களுக்குமுன் இலங்கைக்கு வந்தவரும் தாம் கள்ளத்தனமாக வரவில்லையென்று சான்று காட்டவேண்டும். சான்று காட்டாவிட்டால் மனு நிராகரிக்கப்படும்.

திரு. எப். ஆர். டயஸ் பண்டாரநாயகா: அவர் கூறுவது பொய் என்றே கருதப்படும்.

திரு. நவரத்தினம்: ஆம். தக்க சான்று காட்டாவிடில் பதிவு அதிகாரி மனுவை நிராகரிப்பார்,

எல்லா விண்ணப்பங்களும் ஒரு குறிப்பிட்ட திகதிக்கு முன் வந்து சேரவேண்டுமென்று சம்பந்தப்பட்ட மந்திரி அறிவிப்பார். யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவு நடக்கிறதென்று வைத்துக் கொள்வோம். விண்ணப்பங்கள் எல்லாம் பரிசோதித்து முடிந்தபின் 25 பேருக்கு அடையாள அட்டைகள் கிடைக்கவில்லையென்று வைத்துக்கொள்வோம். சட்டப் பிரகாரம் பின் என்ன நடக்கும்? விண்ணப்பிக்க வேண்டுமென்று மசோதா கட்டுப்படுத்துகிறது. விண்ணப்பித்தபின் 25 பேருக்கு அடையாளஅட்டை இல்லையென்றல் எந்த நீதிமன்றமும் அவர்கள் சட்டவிரோதமாக இலங்கைக்கு வந்தவர்கள் என்று தீர்மானிக்கும்.

முக்கியமாக முல்லைத்தீவு வவனியா, ஓமந்தை, கிளிநொச்சிப்பகுதிகளில்வாழும் மக்கள் இம் மசோதாவினல் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

திரு. பிறின்ஸ் குணசேகரா: கச்சதீவு?

திரு நவரத்தினம்: கச்சதீவுக்கு ஒருவரும் போகப்படாதென்றும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தால் இம் மசோதாவே தேவையில்லை. அது வேறு நாட்டுக்குச் சொந்தமானதென்றல் அங்கிருந்து வருகிறவர்கள் 'விசா' வைத்திருக்க வேண்டும். அது இலங்கைக்குச் சொந்தமானதென்றல் பிரச்னை ஒன்றுமில்லை.

திரு. எப். ஆர் டயஸ். பண்டாரநாயகா: அது இலங்கைக்குத்தான் சொந்தம்

திரு நவரத்தினம்: அது இலங்கைக்குச் சொந்தமானதென்றல்...

திரு எப் ஆர் டி: அதில் உங்களுக்கு சந்தேகமா?

திரு நவரத்தினம்: இல்லை

[5-ம் பக்கம் பார்க்க)

## இன்றைய பலன்

சித்திரை மீ 18 வ.
[30 -4- 68]
செவ்வாய்க்கிழமை

திதி- திருதியை இரவு 2-51 மேல் சதுர்த்தி.

நட்சத்திரம்- ரோகிணி இரவு 2-58 மேல் மிருகசீரிடம்.

ராகுகாலம்- 2-57—4-27

சுபநேரம்- 10-27—11-57

இன்று பிறந்தவர்களுக்கு பொதுத்தொண்டில் ஆர்வம் பிறக்கும். சிலருக்குக் கலைத்துறையில் மோகம் ஏற்படலாம். புகழ்கிடைப்பினும் பொருள் வரவு மந்தமாகவே இருக்கும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடாமல் இருக்கவும், அவசர முடிவுகளைத் தவிர்த்தால் அமைதியான ஆண்டு.

மேஷம்-மனப்போராட்டம். மறதிக்குணம்.
ரிஷபம்- அவசரமுடிவு. அதன் வழித் துன்பம்.
மிதுனம்-பேச்சுவன்மை பெரும் புகழ் உண்டு.
கடகம்- ஆசாரக் குறைவு, அவசரக் கோலம்.
சிம்மம்- அறிவுக்கு விருந்து, ஆராய்ச்சியில் ஆர்வம்
கன்னி- இனிக்கும் நிகழ்ச்சி, இதயப் பூரிப்பு.
துலாம்- நீண்ட பயணம் நினைவலைகள்.
விருச்சிகம்- காதல் கரும்பு. சுவைத்திட விரும்பு.
தனுசு- எதிரி பகை, கடமையில் தொல்லை.
மகரம்- தந்தை வழி ஆதரவு, தனமும் சேரும்.
கும்பம்- செய்தொழில் சிறப்பு, மதிப்பும் உயரும்.
மீனம்- பொருள் வரவு, புதினம் கேட்டல்.

— சோதிடகலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

# ஐயாறன் எழுதுவது

புங்குடுதீவிலிருந்து க. பத்மநாதன் என்பவர் "குறிசுடலாமே" என்ற தலைப்புடன் கடிதமொன்று எழுதியுள்ளார். அதுவருமாறு:

தமிழருக்கு அடையாள அட்டை வழங்க அரசாங்கம் நிச்சயிக்கும் இவ்வேளையில் ஒரு சிறு கருத்தை 'ஈழநாடு' மூலம் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒவ்வொருவருக்கும் ஓர் அடையாள அட்டை கொடுப்பதில் எவ்வளவோ சிரமமும் செலவும் தாமதமும் ஏற்பட இடமுண்டு. எனவே இதற்குப் பதிலாக தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் குறி சுடும் முறையைக் கொண்டு வந்தால் அது செலவையும் சிரமத்தையும் எவ்வளவோ குறைப்பதாயிருக்கும்.

ஒருசில சூட்டுக்கோல்களை விதானைமாரிடம் கொடுத்து இதனை விரைவில் அமுலாக்கி விடலாம். அடையாள அட்டையைக் கொண்டு திரிய வேண்டிய சிரமமும் இதில் தமிழ் மக்களுக்கு இருக்காது.

அரசாங்க திட்டமாய் இது வரும்போது எம் தமிழ்த் தலைவர்களும் இதை எதிர்க்க மாட்டார்கள்: ஆகவே எம் மக்களுக்கு அடையாள அட்டை வழங்குவதிலும் பார்க்க குறிசுடலாமே" என்று எழுதுகின்றர்.

ஃ ஃ

மனதில் எவ்வளவு வேதனையுடன் அவர் இதை எழுதியுள்ளார் என்பதை சுலபமாக ஊகிக்கலாம். மாடுகளுக்கெல்லாம் குறிசுடும் வழக்கம் இருந்ததாயும், அவ்விதமே மனிதருக்கும் செய்யலாமென்றும், அடையாள இலக்கத்தையும் முதுகில் பொறித்துவிடலாமென்றும் கூறுகிறர் ஓர் அன்பர்.

1958-ம் வருட கலககாலத்தில் தென்னிலங்கையில் சில இடங்களிலே 'ஸ்ரீ' எழுத்தை தமிழர் முதுகில் சூட்டுக்குறியால் சுட்டதாகவும் ஓர் அன்பர் நினைவு மூட்டுகிறர்.

ஆனல் அடையாள அட்டை தமிழருக்கு மட்டுமன்றி, இந் நாட்டிலுள்ள எல்லாருக்கும் உண்டு. அப்படியிருக்க குறிசுடும் இந்த யோசனையை சிங்களத் தலைவர்கள் ஏற்பார்களா?

ஃ ஃ

அடையாள அட்டை எல்லாருக்கும் ஒரே விதமாக இருக்குமா? அல்லது இதில் பல பல விதங்கள் இருக்குமா? என்பது முக்கிய கேள்வி ஒரே விதமாகத்தான் இருக்க வேண்டுமென்று தமிழ்த் தலைவர் கூற, மற்றொருவர் பல்வேறு வித அட்டைகள் இருக்க வேண்டுமென்று பார்லிமெண்டில் பேசியுள்ளார்.

மலாயாவிலிருந்து வந்துள்ள ஓர் அன்பரை, அங்குள்ள ஏற்பாட்டைப் பற்றி கேட்டேன். அங்கு நான்கு வித நிறமுள்ள அட்டைகளை வழங்குகின்றர்களாம். [1] நீல நிற அட்டைகள் பிரஜைகளுக்கு. அதில் ஒரு குறுக்குக் கோடு போட்டால், சந்தேகப் பேர்வழிகள். [2] பிரஜைகளல்லாதவர்களுக்கு சிவப்பு நிற அட்டை. [3] பச்சை அட்டை, ஒப்பந்தத்தின் மீது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அங்கு வந்து இருந்து வேலைபார்ப்பவர்கள். [4] பழுப்பு நிறம். சிறைக்கைதிகள், பாதுகாப்புக் கைதிகள். முதலியோர்.

இந்த முறை ஏற்பட்டபின், அடையாள அட்டையில் படத்தை மட்டும்

5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனை முருகன் திருவுலா ஆரம்பம்

# 'பல்கலைக்கழக சைவ மாணவர் ஆலயம் அமைந்தது ஒரு சாதனை'

## தத்புருஷ தேசிகர் பாராட்டு

குரும்பசிட்டி, திங்கள் ""உலகியல், இறையியல் வாழ்க்கை போன்ற துறைகளில் சைவசமயத்தவர் தெய்வத்தை முன்னிறுத்தி எந்தக் காரியங்களையும் செய்யும் மாபு தனிச் சிறப்பானது.

மாணவப் பிராயத்திலே இறை வழிபாட்டில் ஈடுபட வேண்டும். ஆரம்ப காலத்தில் ஆசிரிய சமுதாயம் மாணவர்களுக்குத் தெய்வத்தைப் பற்றிய அறிவை ஊட்டவேண்டும். எந்த இடத்திலும் பல்கலைக்கழகங்களில் நிர்வாகத்தினர் தான் வழிபாட்டு ஸ்தலங்களை நிறுவிக்கொடுக்கின்றனர். ஆனால் இலங்கையில் பல்கலைக்கழகச் சைவ மாணவர்கள் தமக்குத்தாமே ஆலயம் அமைப்பது ஒரு சாதனையாகும். ஆலய வழிபாடு மூலம் மாணவர் தமது கல்வியிலும், வாழ்க்கையிலும் இறைவனின் திருவருளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.''

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலிருந்து இன்று காலை, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள கோவிலில் பிரதிஷ்டைசெய்யப்படவிருக்கும் முருகப்பெருமான் விக்கிரகம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டபோது தருமபுர ஆதீன வித்துவான் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அளித்த ஆசியுரையில் மேற்கண்டவாறு கூறினார்.

ஊர்வலத்தை முன்னிட்டு கந்தசுவாமி கோவிலில் விசேஷ பூசை, வழிபாடு, கூட்டுப் பிரசர்த்தனைகள் நடாத்தப்பட்டன. முருகன் உருவத்துடன் வள்ளி, தெய்வானைவிக்கிரகங்களும் அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் இப்பணிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பமான ஊர்வலத்தில் நீதியரசர் கலாநிதி எச். டபிள்யூ. தம்பையா, உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, உப-சபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம், உதவி வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம், வலி-வடக்குக்காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் இந்து மாமன்றம், சைவ அனுட்டானப் பாதுகாப்புச்சபைப் பிரமுகர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர்.

உப-சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

''தமிழ் வாலிபர்கள், சமய வாழ்க்கையை மறந்து வாழுகின்றனர் என்ற மக்களின் கருத்தை இன்றைய முருகன் பவனி பொய்ப்பிப்பதாக அமைகின்றது. மாணவர்களிடம் ஏற்பட்டுள்ள சமய விழிப்புணர்ச்சி இதன் மூலம் நன்கு தெரிகின்றது. விஞ்ஞானப்பகுதி மாணவர் இன்று சமயத் துறையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். சமயமும் விஞ்ஞானமும் இணைந்த கல்வியை மாணவர் பெற்று வாழ்க்கையின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுதல்வேண்டும்.''

உதவி அரசாங்க அதிபர் திரு. முருகேசம்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:

''சுமார் 1,200 ஆண்டுகளுக்கு முன்னரும் இம்மாதிரியான நிகழ்ச்சியொன்று நடைபெற்றுள்ளது. மாவிட்டபுரத்திலிருந்து தமிழ் மன்னன் ஒருவன் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டு கண்டி நகரை அரசாள அமர்த்தப்பட்டான். கண்டிப் பகுதியில் சைவ கலாச்சாரங்களைப் பரப்ப எடுக்கும் இம்முயற்சியைச் சைவ உலகம் போற்றவேண்டும். பல்கலைக்கழகத்தில் சைவ ஆலயம் நிறுவப்படுவதில் இதுவரை சுணக்கம் ஏற்படக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் தமிழ் மக்களின் துரோகிகளாவர்.''

ஓதுவார்மூர்த்தி இராஜசேகரம் பண்ணிசைப்பாடல்களை இசைத்தார்.

கந்தசுவாமி கோவில் பிரதம குருக்கள், சிவஸ்ரீ சண்முகநாதக்குருக்கள் சுந்தரமூர்த்தி ஐயர் ஆகியோரும் ஆசியுரை வழங்கினர்.

மாவிட்டபுரத்திலிருந்து பவனி யாழ்ப்பாண நகர் வந்துகொண்டிருக்கையில் வழி நெடுகிலும் பாடசாலை மாணவர்கள், மக்கள் பெருந்தொண்[illegible] யிருந்து சுவாமி தரிசனம் செய்தனர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, சுன்னாகம் இராமநாதன் இசைக்கல்லூரி வாசல்களில் பந்தல்கள் அமைத்து சுவாமி தங்கி நின்று செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாதை ஓரங்களில் மக்கள் ஆராதனை அர்ச்சனைகள் செய்துகொண்டனர். மகர தோரணங்கள் கட்டி, பூரண கும்பங்கள் வாசல்கள் தோறும் வைக்கப்பட்டிருந்தன. மாணவர்களின் பஜனை ஊர்வலத்தின் பின்னால் வந்துகொண்டிருந்தது.

---

## ஐயாறன்

[-4ம் பக்கத் தொடர்ச்சி]

அகற்றி வேறு படத்தை ஒட்டி, ஆள் மாருட்டம் நடப்பதுண்டாம். ஆனால் பொலிசார், இதை நுணுக்கமாகக் கவனித்து, இரண்டொரு மணி நேரத்தில் கள்ளத்தனத்தைக் கண்டுபிடித்து விடுகிருர்களாம். இந்த முறை வந்த பின் அங்கு கள்ளக்குடியேற்றமும், கலகமும் பெரிதும் அடங்கியுள்ளதாய் அந்த அன்பர் தெரிவித்தார்.

பிரஜைகள் இந்த அட்டைகள் பெற 50 மலாய் காசும், மற்றவர்கள் 5 வெள்ளியும் கொடுக்க வேண்டுமாம். தென்னுப்பிரிக்காவிலே நீக்ரோவர்கள் 7 வித அடையாள அட்டைகளை வைத்திருக்க வேண்டியுள்ளதாம். வெள்ளையராயின், அவர்களது வெள்ளைத் தோலே ஓர் அடையாளமாக இருந்துவிடுகிறது போலும்.

கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்க வேண்டியது தான் ஆனால் இங்கு பரம்பரையாக வசிப்பவரையே, கள்ளத்தோணி என்று கூறி அடையாள அட்டை கொடுக்க மறுத்து, அவரையும் அவர் குடும்பத்தையும் இம்சைக்கு உள்ளாக்கினுல் அதை எப்படித் தடுப்பது? அவர்கள் எங்கே போவது?

ஃ ஃ

அல்லும்பகலுமாய்நின்ருர் தாமே அந்தியும் சந்தியும் ஆனுர் தாமே, சொல்லும் பொருளெலா மானுர்தாமே தோத்திரமுஞ் சாத்திரமுமானுர் தாமே, பல்லுரைக்கும் பாவெலா மானுர் தாமே பழனை பதியாவுடையார் தாமே, செல்லும் நெறிகாட்ட வல்லார் தாமே திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே.

—அப்பர் சுவாமிகள்

---

## அடையாள......

(4-ம் பக்க தொடர்ச்சி)

இல்லை அது எனது தேர்தல் தொகுதிக்குள் வருமாதனால் எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கும்.

திரு மைத்திரிபரலா: அங்கே வாக்காளர் இருக்க மாட்டார்கள்

திரு நவரத்தினம்: பரவாயில்லை நான் அங்கே உல்லாசப்பிரயாணம் செய்யலாம். அது வேறுவிஷயம். கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதற்காகவே இம் மசோதா கொண்டுவரப்படுவதாகக் கூறப்படுகிறது. விஜயன் காலந் தொட்டு இந்தக் கள்ளக் குடியேற்றம் நடந்துவந்திருக்கிறது. ஆனால் அதைத் தடுப்பதற்கு இப்பேர்ப்பட்ட ஒரு மகா மோசமான மசோதாவை எந்த் அரசாங்கமாவது இச் சபைக்கு கொண்டுவந்ததில்லை.

திரு எப் ஆர் டி: யூ.என் பி. - சமஷ்டிக்கட்சி அரசாங்கத்தைத் தவிர வேறெந்த அரசாங்கமுமில்லை.

திரு. நவரத்தினம்: தற்செயலாக ஒரு பொலிஸ்காரர் என்னையாழ்ப்பாணத் தெருவொன்றில் சந்தித்து ஏய் எங்கே உன் அடையாள அட்டையைக் காட்டு என்று கேட்டால் என்னுடம் அது இல்லாவிட்டால் 'வா பொலிஸ் ஸ்டேஷனுக்கு' என்று அழைப்பான். அடையாள அட்டை எங்கேயோ தவறிவிட்டால் என்னைக் கொம்பனித்தெரு முகாமுக்கு கொண்டு போவார்கள். இதற்கிடையில் என் உறவினர்கள் அந்த அடையாள அட்டையோ அதன் நகல் ஒன்றையோ காண்பிக்காவிட்டால் எனக்கு இடுப்பு எலும்பு மூன்று முறிந்துபோகும். நான் தமிழனுய் பிறந்ததற்காகவே இதெல்லாம் நடக்கும், தமிழனுய்ப் பிறந்த நான்பாவம் செய்தேனே என்பெயர் பண்டாரநாயகா என்று அந்தப் பொலிஸ்காரனிடம் தெரிவித்திருந்தால் நான் தவறியிருப்பேன்.

ஓர் அங்கத்தவர்: சேனநாயகா என்று சொன்னுல்

திரு நவரத்தினம்: 'ம்', சேனநாயகா என்றுப்சொல்லலாம் ஆனுல் என்பெயர் நவரத்தினம் என்று சொன்னுல் நான் ஒரு கள்ளக்குடியேற்றக் காரன் என்றே கருதப்படுவேன்.

திரு எப் ஆர் டி: 'ம்' பன்னுவை விட்டுவிடும்

திரு நவரத்தினம்: அதிலும் பலனில்லை. ஏனென்ருல் பொலீஸ் காரனுக்கு என் மூஞ்சி பிடிக்காமலிருக்கும். அது தான் சங்கடம். [illegible] சகல அதிகாரங்களையும் கொடுக்கிறது. இனிதொச்சி, முல்லைத்தீவு, மன்னர் முதலிய பகுதிகளில் நிலைமை எப்படி இருக்குமென்று சிந்தியுங்கள் ஏன், மதவாச்சி தொகுதியிலும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு இச் சங்கடம் ஏற்படும்.

இருபது வருடங்களாக இந்நாட்டில் அமுலாகி வரும் பிரஜாவுரிமைச் சட்டங்களை கண்ட எமக்கு அச்சம் எழுவது நியாயம். இந்தச் சட்டத்தின் சரித்திர வரலாற்றை நினைவு கூருவது இவ்விடத்தில் பொருந்தும். முதலில் பிரஜாவுரிமை சட்டம் வந்தது அதைத் தொடர்ந்து இந்திய பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டம் வந்தது. அதற்குப் பின்....

[நாளை தொடரும்]

---

## கரவெட்டி கைக்குண்டு வீச்சு வழக்கு விசாரணை

வல்வெட்டித்துறை, திங். 1-ம், 3-ம் எதிரிகள் இருவரும் குண்டுகளை வைத்திருந்தனர். 4-ம் எதிரி துப்பாக்கியுடன் நின்ருர். 1-ம் எதிரி கையில் வைத்திருந்த பொருளால் சிற்றம்பலத்திற்கு எறிந்தார். அது காலில்பட்டதும் அவர் நிலத்தில் விழுந்தார். நான் உடனே வீட்டிற்குச் சென்றுவிட்டேன்.

கரவெட்டி கைக்குண்டு வீச்சு வழக்கில் பொ. ஆழ்வான் என்பவர் சாட்சிய மளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் கே. வின்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

ஆழ்வான் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:—

''காயமடைந்த சிற்றம்பலத்தை எனக்குத் தெரியும். அவர் எனக்குச் சொந்தம். எதிரிகளையும் தெரியும். அவர்கள் சொந்த மில்லை. சம்பவ தினத்தன்று பிற்பகல் 4 மணியளவில் வைரவர் கோவிலடியில் நின்றேன். அப்போது சத்தம் கேட்டது. சத்தம் கேட்ட இடத்திற்குப் போனபோது அவ்விடத்தில், தியாகு, விஞசி, ஐயங்கன், பிச்சையப்பன் ஆகியோர் நிற்பதைக் கண்டேன்.

இவ்வழக்கில் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த இ. தியாகு, தா. விஞசி. வி. ஐயங்கன், சி. பிச்சையப்பன் ஆகிய நால்வரும்அதேயிடத்தைச் சேர்ந்த மு. சிற்றம்பலத்திற்கு இவ்வருடம் தை மாதம் 16-ந் தேதி கைக்குண்டு வீசி காயம் உண்டு பண்ணியதாக பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டி வழக்கு தொடரப்பட்டது.

மாஜிஸ்திரேட் மேல்விசாரணைக்காக அடுத்த மாதம் 5-ந் தேதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

---

## பொருளாதாரத்திற்கு விவசாயம் முதுகெலும்பு

யாழ்ப்பாணம், செவ். 'இன்று நமது பொருளாதாரத்திற்கு விவசாயம் முதுகெலும்புபோல விளங்குகிறது. புதிய விஞ்ஞான முறைகளைக் கையாண்டும் விவசாயிக்கு விவசாயப்பயிற்சி அளித்தும் விவசாய உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். விவசாய அபிவிருத்திக் கழகங்களை நிறுவி விவசாயிகளுக்கு ஊக்கமளித்தல் வேண்டும்.' என்று விவசாயக்கைத்தொழில் அபிவிருத்திஸ்தாபனத்தலைவர் திரு. ச. நடராசா வேம்பிராய் விவசாயஅபிவிருத்திக்கழகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசும்போதுதெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், இக்கழக மூலம் அபிவிருத்தி செய்வதற்கு சிலவழிகள் இருக்கின்றன. இரசாயனங்களால், பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றை அழித்தல், உற்பத்திப் பொருள்களை சந்தைக்குக் கொண்டுசென்று விற்பதற்கு போக்குவரத்து வசதிகளைச் செய்தல் போன்றன அவற்றில் சிலவாகும் என்ருர்.

---

## நிவாரணம் இன்னும் இல்லை

உடுவில், திங்கள் சென்ற வெள்ளத்தின் போது பாதிக்கப்பட்ட ஆனைக்கோட்டை, நவாலி— மானிப்பாய் பகுதிகளை சேர்ந்தவர்களுக்கு வெள்ள நிவாரணப்பணம் இன்னும் வழங்கப்படவில்லையாம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இதனையிட்டுபெரும் கவலையும் அதிருப்தியும் கொண்டுள்ளார்கள்.

---

காங்கேசன்துறையில்

## ஜப்பான் கடிதங்கள்

காங்கேசன்துறை, திங்கள் ஜப்பானிலிருந்து இலங்கைவரும் கடிதங்கள் முதல் தடவையாக காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கப்படவிருக்கிறது. ஜப்பானிலிருந்து கார்கள் உரம் கண்ணுடி உதிரிப்பாகங்கள் ஏற்றி காங்கேசன்துறை துறைமுகம் வந்த 'மதருஸ் மாறு' என்னும் கப்பலிலிருந்து ஜப்பானிய தபால்கள் வந்துள்ளது. இத் தபால்களை இங்கு இறக்கப்படுவதற்கு வசதிசெய்து தரும்படி கப்பல்கம்பனியார் காங்கேசன்துறை தபால் அதிபரைக் கேட்டுள்ளனர். காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு தலைமை காரியாலயத்திற்கு தபால் அதிபர் உடனடிச்செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இன்று அறிவித்தல் வந்ததும் இங்கு இறக்கப்படும்.

---

## பூர்த்தி விழா

சாவகச்சேரி, திங்கள் எழுதுமட்டுவாள்- விடத்தற்பளை கலாச்சார நெசவு நிலையத்தின் ஓர் ஆண்டு பூர்த்திவிழா சென்ற வாரம் சாவகச்சேரி எம். பி. தலைமையில் நடைபெற்றது. தென்மராட்சிக் காரியாதிகாரி திரு ஆர் சிதம்பரப்பிள்ளை, கிராமவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. ஏ. ஜெயரத்தினம், ஆசிரியர் திரு. தில்லை நடேசன் உட்படபலர் விழாவில் உரையாற்றினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலவைத் தொழிற்சாலை வழக்கில் எதிரி விடுதலை

குரும்பசிட்டி, திங்கள்

சமூக குறைபாடுகள் ஒழிப்புச்சட்டத்தின் அடிப்படையில் சலவைத் தொழிற்சாலை உரிமையாளர் ஒருவருக்கு எதிராக பொலிஸாரால் தொடரப்பட்டிருந்த வழக்கை விசாரணை முடிவில் தள்ளுபடிசெய்து எதிரியை மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் விடுதலைசெய்தார்.

சுன்னாகம் பொலிஸார் தெல்லிப்பழையிலுள்ள சலவைத் தொழிற்சாலையொன்றின் உரிமையாளர் வேலுப்பிள்ளை சின்னத்துரை என்பவருக்கு எதிராக அதேயிடத்தைச்சேர்ந்த எல்லுப்போலை கந்தசாமி என்பவரின் உடுப்புக்களை சலவைசெய்ய மறுத்ததாக இவ்வழக்கில் குற்றஞ் சாட்டியிருந்தனர்.

விசாரணையின்போது கந்தசாமி என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவதினம் காலை 10 மணியளவில் சேட் ஒன்றினைச் சலவைக்குப் போடுவதற்கு எதிரியின் கடைக்கு சென்றிருந்தேன். அந்நேரம் எதிரி கடையில் நிற்கக் காணப்பட்டார். நான் சேட்டைக் கொடுத்து சலவைக்குப் போடக்கேட்டபோது எதிரி மறுப்புத் தெரிவித்து பாரம்எடுக்கமாட்டேன் எனத் தெரிவித்தார். உடுப்பைச் சலவைக்கு பாரமெடுக்க மறுத்ததால் உடுப்பினை வீட்டில் கொண்டுசென்று வைத்துவிட்டு பொலிஸ் நிலையம் சென்று புகார் செய்தேன்.

சண்முகம் பரமேஸ்வரன் என்பவரும் சாட்சியமளித்தார். சாட்சிகள் எதிரி தரப்புவழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பின்னர் எதிரியை விடுதலை செய்வதாக நீதிபதி தெரிவித்தார்.

எதிரிசார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். பொலிஸ் தரப்பில் திரு. எஸ். நடராசா வழக்கை நடத்தினார்.

# மனக்கவலைக்கு மருந்து சொல்கிறார் கல்வி மந்திரி

மருதானை, திங்கள்

''சங்கீதம் எல்லோராலும் விரும்பிப் போற்றப்படும் உன்னதக் கலையாகும். சாதி சமய பேதமின்றி மக்களை ஒன்றுபடுத்தும் சக்தி சங்கீதத்திற்கு உண்டு. இசைக்கு மொழி வேறுபாடு என்பதுமில்லை. ஒரு நாட்டினரின் சங்கீதத்தை மற்றைய நாட்டினர் வெகு ஆவலுடன் பருகுகின்றனர். இசை வெள்ளம் அவர்களை எட்டாத ஒரு தொலைக்குக் கொண்டு சென்றுவிடுகின்றது. மனதிலிருக்கும் கவலைகளை மறக்கச் செய்கின்றது சங்கீதம். ஆகவே இக்கலையை எமது கண்களாகப் போற்றிக் காக்கவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.''

இவ்வாறு வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் கோயிலில் நடைபெற்ற இலங்கை சங்கீதசபையின் இரண்டாம் நாள் இசைவிழாவில் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர் ஏ. இரிய கொல்லை பேசுகையில் குறிப்பிட்டார்.

செனட் சபைத் தலைவர் திரு ஏ. ரத்நாயக்கா பேசுகையில் கூறியதாவது: ''இந்துக்களின் கலையம்சத்தில் முக்கிய இடம்வகிக்கின்றது சங்கீதம். இதிகாசத்தை நாம் புரட்டுவோமாயின் அதில் எத்தனையோ சங்கீத வல்லுனர்களின் பெயர்கள் பொன்னெழுத்தில் பொறித்திருப்பதைக் காண்கிறோம். எங்கள் முன்னோரை மட்டுமன்றி எம்மையும் ஆட்டிப் படைக்கின்றது சங்கீதம். ஒருவனின் உள்ளத்தை ஆழ மறியும் சக்தி சங்கீதத்திற்கு மாத்திரமே உண்டு. ஆகவே உங்கள் முழு ஆதரவையும் இக்கலையை வளர்க்க முற்படும் இலங்கை சங்கீத சபைக்கு அளியுங்கள்.''

''இசை, சாதி மத மொழி வேறுபாடுகளை ஒழித்து மக்களிடையே ஐக்கிய உணர்ச்சியை உண்டுபண்ணும்'' என்று தேசிய சேவை, விளையாட்டு அமைச்சர் திரு. வி ஏ. சுகததாசா இவ்விழாவில் கூறினார்.

6 மணி முதல் 11 மணி வரை இவ்விழா நடைபெற்றது.

## ''விசேஷசலுகை வேண்டும்''

யாழ்ப்பாணம், செவ்.

இலங்கைப் புகையிரத சேவையில் அரசாங்க ஊழியர்களுக்கு விசேஷ சீசன் டிக்கெட் வசதி இருப்பது போன்று இலங்கை பஸ் போக்குவரத்துச் சேவையிலும் அரசாங்க ஊழியர்களுக்கு விசேஷ சீசன் டிக்கெட் வசதிகள் செய்துதர வேண்டுமென காரைநகர் பொதுநல சேவைச் சங்கக் காரியதரிசி திரு எஸ். செல்லத்துரை இலங்கைப் போக்குவரத்துச் சபைக் கமிஷனரைக் கேட்டுள்ளார்.

(வி.நி)

## பெயரில் பிரச்னை

யாழ்ப்பாணம், திங்கள்

மயக்கமுற்ற நிலையில் யாழ்ப்பாணநகர மத்தியில் காணப்பட்ட வயோதிபர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு திடீர் மரணமானார். பிச்சைக்காரனது தோற்றமுடைய இவரது பெயர் முருகன் கந்தன் [வயது 87] என மயக்க நிலையில் இருந்த வயோதிபர் விசாரணை செய்த டாக்டருக்கு தெரிவித்தாராம்.

கடவுளே முருகா கந்தா என்று வணங்கினரோ அல்லது பெயர்தான் முருகன் கந்தனோ! என பொலிசார் சந்தேகிக்கின்றனர். அவரது மடியில் பணமும் இருந்ததாம். மரணமான இவரை ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைத்துள்ளனர். உறவினர்கள் யாரென அறிவதில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கில்

## வைத்தியசாலை நிறுவப்படும்

உடுவில், திங்கள்

யாழ்ப்பாணத்தில் மிருக வைத்தியசாலை அமைப்பதற்குரிய நிலம் விரைவில் மிருக வைத்திய அதிபருக்கு கையளிக்கப்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு கி. முருகேசம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள முற்றவெளிக்கு மேற்குப் புறமாகவுள்ள நிலத்திலேயே இந்த மிருக வைத்தியசாலை அமைக்கப்பட இருக்கின்றது. இவ் வைத்தியசாலையை அமைப்பதற்கு வேண்டிய முடிக்குரிய நிலத்தை மிருகவைத்திய அதிபருக்கு தாம் கையளிக்கத் தீர்மானித்திருப்பதாகவும், இவ்வருடம் முடிவதற்குள் இம்மிருக வைத்தியசாலை கட்டப்பட்டு செயற்பட ஆரம்பித்து விடுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வைத்திய அதிகாரி இடமாற்றம்

### சுகாதார சேவையாளர் சங்கம் மகஜர்

புலோலி, திங்கள்

திருக்கோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட வைத்திய அதிகாரி இன்னும் அங்கு செல்லவில்லையென்றும் அவரை உடனடியாக அங்கு அனுப்புமாறு சுகாதாரசேவை சுப்பிரின்டனை சுகாதார சேவையாளர்சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

புலோலி மந்திகை ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய குறிப்பிட்ட வைத்திய அதிகாரி இம்மாத முற்பகுதியிலும் இரு சிறு ஊழியர்களைத் தாக்கியதாகச் செய்யப்பட்ட புகாரின் விசாரணைகள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இவ்வைத்திய அதிகாரி இன்னமும் இங்கிருந்து இடமாற்றம் செய்யப்படாததால் சிறு ஊழியர்கள் தங்கள் கடமையைச் சரியாகச் செய்ய முடியாதிருப்பதாகவும், நோயாளரும் ஆஸ்பத்திரிக்குவர பீதியடைவதாகவும் வைத்திய சுப்பிரின்டனுக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனலைதீவு கி. ச.

## தேர்தல் ஒத்திவைப்பு

அனலைதீவு, திங்கள்

இவ்வருடம் நடைபெற வேண்டிய அனலைதீவுக் கிராமசபைத் தேர்தல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வரை பின்போடப்பட்டுள்ளது.

# பௌர்ணமி கலை நிகழ்ச்சி 4 ஆண்டு நிறைவு விழா

### 3 நாட்கள் கொண்டாட ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்.

தொடர்ந்து நான்கு வருடங்களாக பௌர்ணமிநாட்களில் பொதுமக்களுக்காக யாழ். திறந்தவெளியரங்கில் இலவசமாகக் கலை நிகழ்ச்சிகளை நடத்திவந்த யாழ்ப்பாண மாநகரசபை மேற்படி நிகழ்ச்சிகளின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவை அடுத்தமாதம் 11, 12, 13-ம் திகதிகளில் சிறப்பாகக் கொண்டாட நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆண்டு நிறைவுவிழாவையொட்டி பௌர்ணமி நாளை முன்னும் பின்னுமாக அடுத்துவரும் மேற்படி இரு நாட்களையும் சேர்த்து இம்மாதத் திற்கான கலை நிகழ்ச்சிகளை மூன்று நாட்களுக்கு நீடித்து நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

முதல் இரு நாட்களும்பாடசாலை மாணவர்களுக்கான நாடக விழாவாக அமையும். இதில் ஆண்கள் பாடசாலைகள் மேடையேற்றும் நாடகங்கள் முதல்நாளிலும், பெண்கள் பாடசாலைகள் மேடையேற்றும் நாடகங்கள் இரண்டாம் நாளிலும் இடம்பெறும். மாணவர் நாடகவிழா, நாடகத்துறையில் மாணவரது கவனத்தைத் திருப்புவதற்காகவே சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டதாம். சென்ற வருட நிகழ்ச்சிகளின்போது தான் மாணவர் மேடையேற்றும் நாடகங்களுக்கென சிறப்பாக இருதினங்கள் முதன் முதலாக ஒதுக்கப்பட்டது. சென்றஆண்டில் நடைபெற்ற பாடசாலைகளுக்கான நாடகவிழாவில் யாழ். மத்தியகல்லூரி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, இந்து மகளிர் கல்லூரி ஆகியவை கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டு நிகழ்ச்சிகளில்கூடுதலான பாடசாலைகள் கலந்துகொண்டு நாடகங்களை மேடையேற்ற முன்வரக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்றும்நாள் நிகழ்ச்சிகள் கதம்ப நிகழ்ச்சிகளாக அமையுமெனவும், கலையுலகில் முன்னணியில் திகழும் கலைஞர்கள் நடன, இசை நிகழ்ச்சிகளை அளிக்க முன்வந்திருப்பதாகவும் அன்று ஒருமணிநேர நாடகம் ஒன்றும் மேடையேற்றப்படுமெனவும் அறியப்படுகிறது.

இந்நிகழ்ச்சிகளை வானொலி மூலம் அஞ்சல் செய்யவும், நிகழ்ச்சிகளைச் செய்திப் படத்தில் சேர்ப்பதற்கும் சம்பந்தப்பட்டவர்களுடன் சிறப்பு ஆணையாளர் தொடர்புகொண்டு வருகிறார் எனவும் தெரியவருகிறது. (நி)


# ரேக்


நேரடிக் களை கொல்லி உபயோகித்து

# நெல் விளைவைப் பெருக்குங்கள்



ரேக்கின் நேரடித் தொழிற்பாட்டால் களைவகைகள் வேரோடு அழிந்து போகின்றன. களைகளின் இலைகளை வாட்டி எரிப்பதோடு நின்றுவிடாமல், அவை மீண் வளர்ந்து நெற்பயிர் வளர்ச்சியைப் பாதிக்காமலும் தடுக்கின்றது.

கோழிச்சூடன், சந்தனக் கோரை, முடிச்சுக் கோரை, கிரிந்தி, பத்தடெல்லா, பிங்குரு முதலான களைவகைகளையெல்லாம் ரேக் பூண்டோடு அழிந்துவிடும். போட்ட உரப் பசளை முழுவதும் நெற் பயிருக்கே கிடைப்பதனால், அது ஓங்கி வளர்ந்து மிகுதியான விளைவு தருகின்றது.



நேரடிக் கொல்லியான ரேக்கினையே உபயோகியுங்கள். நெல் விளைவு பெருகும்.

Monsanto

* மொன்சந்தோ கொம்பனியின் வர்த்தகக் குறி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் பாட்மின்ரன் கோஷ்டிகள் அனுராதபுரத்தில் அமோகவெற்றி

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாண பாடசாலைகளின் ஆண், பெண் கட்டு பாட்மின்ரன் தெரிவுகோஷ்டிகள் அனுராதபுரம் பாடசாலைகள் ஆண், பெண் கட்டு பாட்மின்ரன் தெரிவுக் கோஷ்டிகளுடன் மோதிக்கொண்டதில் இரண்டு போட்டிகளிலும் யாழ்ப்பாணக் கோஷ்டிகள் அமோக வெற்றியீட்டி யாழ்ப்பாணம் திரும்பின.

அனுராதபுரம் 'நியூரவுன்' மண்டபத்தில் நடைபெற்ற இப்போட்டிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து எடுக்கப்பட்ட ஆண்கள் கோஷ்டியும்பெண்கள்கோஷ்டியும் முறையே 4—1, 4 1 புள்ளிகளால் அனுராதபுரம் பாடசாலைக் கட்டுக்கோஷ்டிகளான ஆண்கள் கோஷ்டியையும் பெண்கள்கோஷ்டியையும் தோற்கடித்தன. யாழ்ப்பாணபாடசாலைகளின் ஆண், பெண் கட்டுப் பாட்மின்ரன் கோஷ்டிகள் வெளியிடம் சென்று அமோக வெற்றியீட்டியது இதுவே முதல் தடவையாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆண்கள்பாட்மின்ரன் கோஷ்டியில் காப்டன் திரு. எஸ். நிமலானந்தாவும், சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த திரு. எஸ். சுகுமார், திரு. ஜே. ஈ. ஆர். செல்லத்தம்பு ஆகியோரும் யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த யோகேஸ்வரனும் கலந்துகொண்டனர். யாழ்ப்பாணப் பெண்கள் கோஷ்டியில் யாழ்ப்பாணம் கொன்வென்ற் மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஏ. அஞ்சலாசெல்லத்தம்பு [காப்டன்], வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ். சுமங்கலா வடிவேலு, சசிகலா ஆறுமுகம், சுண்டிக்குழி மகளிர்கல்லூரியைச் சேர்ந்த ரஞ்சினிசபாரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர். [வி.நி]

# "கிளித்தட்டு விளையாடுங்கள் உடல் உறுதிபெறலாம்"

## பரிசளிப்புவிழாவில் தீவுப்பகுதி எம்.பி.

ஊர்காவற்றுறை, திங் "தேசிய விளையாட்டாகிய கிளித்தட்டு எந்தவித உபகரணமுமின்றி விளையாடக் கூடிய ஒரு விளையாட்டாக உள்ளது. கிராமம் கிராமமாகச் சென்று இக்கிளித்தட்டுப்போட்டியின் விதிகளை அறிந்து தீவுப்பகுதி விளையாட்டதிகாரி பொன்னுச்சாமி, இங்கும் திறமையாக ஒரு சுற்றுப்போட்டியை நடாத்தியுள்ளார். இந்தப் போட்டியினால், விளையாடுபவர்கள் உடல் உறுதி பெறுவதுடன் விளையாட்டைப் பார்ப்பவர்கள் அதிக அளவு மகிழ்வடைகிறார்கள்'

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட கரபந்தாட்ட, கிளித்தட்டு சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றி சாம்பியன்களான கழகங்களுக்கு பரிசளிப்பு வைபவம் நடாத்தப்பட்டபோது, அதில் தலைமைதாங்கிப் பேசிய ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. விஞயகலிங்கம் பேசுகையில், 'நாட்டின் எதிர்காலப் பிரச்னைகளைத் தீர்க்க இளைஞர்கள் பலமும் உறுதியும் பெற்றிருக்க வேண்டும் என்றும் நாடு இன்று பொருளாதாரப் பிரச்னையில் பின்தங்கியுள்ளதால் உடலுறுதியுடன் உழைக்கக்கூடிய இளைஞர்கள் நாட்டுக்குத்தேவையென்றும், உடலுறுதியும் பலமும் கிளித்தட்டுப் போன்ற விளையாட்டுகளால் கிடைக்கிறதென்றும் கூறினார்'.

### கிரிக்கெட்

## அரியாலைக் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள் அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்துக்கும் காங்கேசன்துறை இமெந்துக் கூட்டுஸ்தாபன ஊழியர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஒரு கிரிக்கெட் மோதலில் அரியாலை 52 ஓட்டங்களால் காங்கேசன் துறைக் கோஷ்டியைத் தோற்கடித்தது.

அரியாலை மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காங்கேசன் துறைக் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. அரியாலை துடுப்பெடுத்தாடி சகல விக்கெட்டுகளையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்றது. இக்கட்டத்தில் காங்கேசன்துறைக் கோஷ்டியின் பந்தெறி வீரரான எம். எப். சந்தியாகோ சிறந்த முறையில் பந்து எறிந்து மொத்தம் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அரியாலையின் சிறந்த துடுப்படி வீரரான சோமபாலன் 34 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. [வி.நி.]

## கெனடி கோஷ்டி வென்றது

சுழிபுரம், திங்கள் தொல்புரம் கெனடிக் கோஷ்டிக்கும் காரைநகர் நீலிப்பந்தனை சனசமூகநிலையக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் தொல்புரம் கெனடி கோஷ்டியினர் வெற்றிபெற்றனர். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் போட்டி நடைபெற்றது.

## குருவிளையாட்டுக்கழகம் சாம்பியன்

குரும்பசிட்டி, திங்கள் குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் காங்கேசன்துறை குரு விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

## பொதுவிளையாட்டு மைதானம் இல்லை

கண்டி, திங்கள் எல்லா விளையாட்டுத் துறையிலும் நல்லதொரு ஸ்தானத்தை வகிக்கும் கண்டி மாநகரில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கும் விளையாட்டுப் பிரியர்களுக்கும் கண்டியில் ஒரு பொது விளையாட்டு மைதானம் இல்லாதது பெருங் குறையாகவுள்ளது.

பலவருட காலமாக கண்டியின் பொது விளையாட்டு மைதானமாக பாவிக்கப்பட்டு வந்த போகம்பரை மைதானம் கடந்த மூன்று வருட காலமாக செயலற்றுக் கிடப்பதும் இங்குள்ள விளையாட்டு வீரர்களுக்கு விளையாடுவதற்கு பெரும்

[8-ம் பக்கம் பார்க்க]





பிரத்தியேகமான மின்காப்புத் தன்மை வாய்ந்த உறுதியான எஸ்-லோன் பீவீசீ குழாய்கள், மின்காப்பு வேலைகளுக்கென அரசாங்க மின்சார இலாகாவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

பொருத்துவதற்கு வசதியும் சௌகரியமும். பிறவற்றை விடப் பாரக் குறைவும், நிலைப்பு வன்மையும், நீடித்த பெருமதியும் கொண்டிருப்பதால், எஸ்-லோன், வீட்டுப் பாவனைக்கும் தொழில் துறை உபயோகத்துக்கும் இத்துறையில் முற்றிலும் தேவையானதாக அமைகிறது.

S-lon

எஸ்-லோன் — குழாய்த் தொழிலில் அதி சிறந்த இலவச தொழில் நுட்ப ஆலோசனையினதும் சேவையினதும் ஆதாரம் கொண்டது.

மகாராஜா ஓர்கனைசேஷன் லிமிட்டெட்

MO/P76


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே மாதத்தில் நிறைவேற்ற அரசாங்கம் உறுதி

## எதிர்ப்பைச் சமாளிக்க நம்பிக்கை

கொழும்பு, திங்கள்

மாவட்டசபைகள் மசோதாவுக்கு மல்வத்தை மகாநாயகதேரோவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது அரசாங்க வட்டாரங்களில் சிறிது அச்சத்தைக் கொடுத்திருக்கிறபோதிலும், மசோதாவை பார்லிமெண்டில் சமர்ப்பித்து அதைப் பற்றி சரியான விளக்கம் கொடுத்தால் எதிர்ப்பு குறையும் என்றும், இந்த எதிர்ப்பினால் அரசியலில் அதிக பாதகம் ஏற்படமாட்டாதென்றும் மந்திரிகள் பலரும் கருதுகின்றனராம்.

எப்படியும் மே மாதத்துக்குள் மாவட்ட சபைகள் மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றிவிட வேண்டுமென சிரேஷ்ட மந்திரிகள் உறுதி கொண்டிருப்பதாகவும் அரசாங்க வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது. பார்லிமெண்டின் இப்போதைய கூட்டத் தொடர்கலைக்கப்படுவதற்கு முன்மாவட்டசபைமசோதா கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படுமென அரசாங்க வட்டாரங்களும் தமிழரசுக்கட்சி வட்டாரங்களும் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஹேமா பஸநாயகா, மாவட்டசபை மசோதாவுக்கு எதிராகச் செய்துவரும் பிரசாரம் இப்பகுதிகளில் அரசாங்கத்துக்குப் பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறதென்றும் இச்சமயத்தில் மல்வத்தை மகாநாயக தேரோவும் மாவட்டசபைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது நிலைமையை மேலும் மோசமாக்கக் கூடுமென்றும் அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது. ஆனாலும் மல்வத்தை மகாநாயக தேரோவின் எதிர்ப்பைச் சமாளித்துவிட முடியுமென அரசாங்க வட்டாரங்கள் கருதுகின்றன.

### முன்னரும் எதிர்த்தார்

இலங்கை — இந்திய ஒப்பந்த மசோதா கொண்டு வரப்பட்டபொழுது மல்வத்தை மகாநாயகதேரோ அந்த மசோதாவை வன்மையாக எதிர்த்து நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினர். ஆயினும் மகாநாயகதேரோவின் சந்தேகங்களுக்குப் பிரதமர் பதிலளித்ததுடன் மகாநாயக தேரோவை பிரதமரும் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் தனித்தனியே இரண்டொரு தடவை சந்தித்துப் பேசி பின்னர் அவரைக் கொண்டே மசோதாவுக்கு ஆதரவு தெரிவிக்கச் செய்த சம்பவத்தையும் அரசாங்க வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

மாவட்ட சபை மசோதா நிறைவேற்றப்பட்டால் சிங்கள தமிழ் ஒற்றுமை குலைந்து விடுமென்றும் நாட்டில் அமைதியின்மை ஏற்படுமென்றும் கூறும் மகாநாயக தேரோ மக்களின் பலத்த எதிர்ப்பைத் தேடிக்கொண்டுள்ள மசோதாவை எதற்காக வேண்டுமென்றுகேட்டிருூர்.

'பதவி.........

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நவரத்தினம்தனது கருத்தை அவர் 'ஒப்புக்கொண்டார்' என்ற உண்மை பல.

27-வது ஷரத்தை நீக்க வேண்டுமென்று கூறினர் நவரத்தினம். 23-ந் திகதி பார்லிமெண்ட்குழு கூடும் போது ஆட்சேபணையைத் தெரிவிப்பதென்று முடிவு செய்தோம். பிற்பகல் 1-30 மணிக்கு கட்சிக்குழு கூடிய போது ஏகமனதாகஆதரிப்பதென்று தீர்மானித்தோம். திரு. நவரத்தினம் கூட்டத்துக்குவரவில்லை. இம்முடிவை ஏற்று நடக்க முடியாதென்று திரு. நவரத்தினம் தெரிவித்தார்.

அடுத்த நாள் திரு. நவரத்தினத்தைக் கேட்ட போது தனது எதிர்காலம் பற்றி இன்னும் ஒரு முடிவு செய்யவில்லை என்று நீங்கள் செய்த செய்கைப் பின் கட்சி உங்களை வெளியேற்ற தீர்ப்பதைத் தெரிகிறதென்பதை நீ ஒப்புக்கொள்கிறீர்கள் என்று நான் கூறினேன். வெளியேற்றத் தீர்மானித்துவிட்டோம் என்றோ, எந்த முகத்தோடு பிரதமரைப் பார்ப்போமென்றோ எக்கட்டத்திலும் நான் கூறவில்லை.

# பேராதனை முருகன் திருவுலா இன்றையநிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செவ்.

பேராதனைப் பல்கலைக் கழக முருகன் கோவிலுக்குக் கொண்டு செல்லப்படும் முருகன், வள்ளி, தெய்வானை சமேதரான பஜனை ஊர்வலம் இன்று காலை நல்லூர் சிவன் கோவிலிலிருந்து இரண்டாம் நாளாக ஆரம்பமாகும் நேற்று இந்த ஊர்வலம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிலிருந்து ஆரம்பமாகியது. (செய்தி 5-ம் பக்கம் பார்க்க

காலை 8 மணிக்கு இங்கிருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் 8-30 மணிக்கு நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை 8-55 மணிக்கு நாயன்மார்க்கட்டு இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம், 9-25 மணிக்கு கைதடி வயோதிபர் விடுதி 9-50 மணிக்கு நுணாவில் சந்தி, 10-00 மணிக்கு சாவகச்சேரிசந்தை 11 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 1-20 மணிக்கு மீசாலை, 1-45 மணிக்கு கொடிகாமம். 2-45 மணிக்கு பளை மகா வித்தியாலயம், 3-45 மணிக்கு ஆனையிறவு. 4-00மணிக்கு பரந்தன், வழியாக 6 மணிக்கு கிளிநொச்சியை வந்தடையும்.

இரவுகிளிநொச்சி முருகன் கோவிலில் விசேஷ பூஜையும், பஜனை ஆராதனைகளும் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். நாளை காலை மீண்டும் ஊர்வலம் அனுராதபுரம் நோக்கி ஆரம்பமாகும்.

## எதிரி விடுதலை

சாவகச்சேரி, திங்கள்

இவ்வருடம்பெப்ரவரி5-ம் திகதி கிளிநொச்சிப்பகுதிக் காணி அபிவிருத்தித்திட்ட மேற்பார்வையாளரான என். துரைராஜா என்பவரை அதே ஊரைச் சேர்ந்த இறப்பு, பிறப்பு விவாகப் பதிவுக்காரரான கே. அருளம்பலம் என்பவர் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கிளைராசா முன்னிலையில்விசாரணை செய்யப்பட்டு விசாரணைமுடிவில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

எதிரி சார்பில் புறக்டர் திரு. வி. கனகசபையின் அனுசரணையுடன் அட்வகேட் திரு. வி. என். நவரத்தினம் ஆஜரானர்.

## இலவசபடக்காட்சி

குரும்பசிட்டி, திங்.

ஊரங்குனை விவேகானந்தா சனசமூக நிலையமுன்றலில் இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்க யாழ் பிரதேசக் கிளையினரால் சோவியத் ஸ்தானிகராலயத் தகவல் படக்காட்சி இலவசமாகக் காண்பிக்கப்பட்டது.

## பதவியிலிருந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தீர்மானத்தில் சிறுபான்மை மக்களாகிய தமிழரையே அதிகம் பாதிக்கக் கூடிய அடையாள அட்டை மசோதாவை எக்காரணம் கொண்டு தமிழரசுக் கட்சி ஆதரிக்கின்றது என்பது பற்றி அறியாமல் ஊர் மக்கள் திகைக்கின்றனர் என்றும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட சம்பவம் கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளனர் என்றும் எம். பி. பதவியையும் துறக்கும்படி தமிழரசுக் கட்சி செயற்குழு கோரியிருப்பது சிரிப்புக்கு இடமானதென்றும், பதவியைத் துறக்கும்படி கேட்பதற்கு தீவுப்பகுதி மக்களுக்குதான் உரிமையுண்டேயொழிய கட்சிக்கல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மக்களுக்கு விளக்கம் தெரிவிப்பதற்காக முற்போக்கு வாலிபர் இயக்கத்தினர் அனலைதீவில் ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதெனவும் தீர்மானித்துள்ளனர்.

லங்கள், தியேட்டர்களில்

# புகைபிடிப்பவர்கள் மீது பொலிஸார் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

பஸ் வண்டிகளிலும், தியேட்டர்களிலும் புகை பிடிப்பவர்கள் நாளை முதல் பொலிசாரின் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாவார்கள்.

இ. போ. ச. மாநகரசபை பிரமாணங்களுக்கு இணங்க பொலிசார் இந்நடைவடிக்கையை மேற்கொள்ள விருக்கின்றனர்.

வடபகுதியில் நாளைமுதல் மே மாதம் முடிவு வரை பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு மாதமாகக் கொண்டாட இருப்பதே இதற்கு முக்கியகாரணமாகும். இது சம்பந்தமாக பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர் சுந்தரலிங்கம் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பஸ்வண்டிகளில் புகைபிடிப்பவர்கள் பஸ் வண்டிகளிலிருந்து இறக்கப்படுவதுடன்தியேட்டர்களில் புகைப்பிடிப்பவர்கள் தியேட்டரிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். இதுதவி பொலிஸ் நிலையங்களில் சாதாரணகுற்றச்சாட்டுகளும் இதுசச்சரவுகளும் புகாராகப் பதிவு செய்யப்படாமல் சமாதானம்செய்து வைக்கப்படும்.

...ல பாடசாலைகளிலும் ...ஸ்தாபனங்களிலும் பொலிஸ் சுப்பிரிண்டனும், உயர்தர பொலிஸ் அதிகாரிகளும் சமாதானத்தை நிலைநாட்டக்கூடிய சொற்பொழிவுகளை நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. [காநி]

## தமிழறிஞர்களை அழைக்க முடிவு

அளவெட்டி, திங்கள்

தமிழகத்தில் இருந்து தமிழறிஞர்களை அழைக்க கம்பன் கலைக் கழகத்தினர் முடிவு செய்துள்ளனர்.

மாவிட்டபுரம் பழைய கம்பன் கலைக்கழகத்தினர் ஜூலைமாத இறுதிவாரத்தில் பண்டைய இலக்கிய கர்த்தாவும் மகாபாரதத்தை தமிழில் யாத்தவருமான வில்லிபுத்தூராருக்கு விழா எடுக்க முடிவு செய்துள்ளனர்.

மகாபாரதத்தை வீரம், பெண்மை, பொறை, தர்மம் என்று நான்கு பிரிவுகளாகப் பிரித்து இத்தலைப்புகளில் சிறப்பு சொற்பொழிவுகள் ஆற்றுவதற்று ஈழத்து அறிஞர்களுடன் தமிழகத்தில் இருந்து தமிழறிஞர்களையும் அழைத்து சிறப்பாக இவ்விழாவை கொண்டாடுவதென கம்பன் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில்

# மேதினக் கூட்டங்களின் ஏற்பாடுகள் பூர்த்தி

## நான்கு ஊர்வலங்கள் இடம்பெறும்

யாழ்ப்பாணம், செவ்.

நாளை நடைபெறவிருக்கும் மேதின விழாவைச் சிறப்பாகக் கொண்டாட யாழ்ப்பாணத்திலுள்ள நான்கு தொழிற்சங்கங்களும் ஒழுங்குசெய்துள்ளன. இதற்கான ஊர்வலத்துக்கு பொலிசார் அனுமதியும், பாதுகாப்பும் வழங்கியுள்ளனர்.

கோட்டை முற்றவெளியில் தமிழ் காங்கிரஸ் ஆதிக்கத்தின் கீழ் இயங்கும் தொழிற் சங்கங்களும், நகர மண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்தின் கீழ் இயங்கும் தொழிற்சங்கங்களும், 'ஸ்டேடியம்' மைதானத்தில் புரட்சிவாத கம்யூனிஸ்ட் கட்சி தொழிற் சங்கங்களும் ஜின்னு மைதானத்தில் கூட்டாட்சிகளின் தொழிற் சங்கங்களும் கூட்டங்களை நடாத்தும்.

மேதினவிழாவை முன்னிட்டு நாளைகாலை 3 தொழிற்சங்கங்கசம்மேளனங்கள் 4 ஊர்வலங்களை நடாத்தவுள்ளன. புரட்சிவாத கம்யூனிஸ்ட் தொழிற்சங்கங்கள் மாலை 3 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலிருந்து புறப்பட்டு சுமார் 10 மைல்நீள ஊர்வலமொன்றை யாழ். நகரின் பிரதான வீதிகள் ஊடாக நடாத்தவுள்ளன. கூட்டாட்சிகளின் தொழிற் சங்கங்கள் நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து புறப்பட்டு ஜின்னு மைதானம்வரை நடாத்தவுள்ளன.

காங்கிரஸ்கட்சித்தொழிற் சங்கங்கள் இரு ஊர்வலங்களை நடாத்தவுள்ளன. நாச்சிமார் கோவிலிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலத்தில் திருவாளர்கள் ஜி.ஜி பொன்னம்பலம் எம்.பி.யும் தா. சிவசிதம்பரம் எம். பி.யும், ...வலத்தில் உடுப்பிட்டி எம். பி.யும், ... மான திரு. எம். சிவசிதம்பரமும் மேற்கு ஜெர்மன் தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவரும் ஊர்வலமாக அழைத்துவரப்படுவர். தமிழரசுக்கட்சியின் தொழிற் சங்கங்கள் இம்முறை ஊர்வலம் நடாத்துவதைக் கைவிட்டுள்ளன.

கூட்டாட்சிகள் கூட்டத்தில் திரு. பி. பி. சுபசிங்கா எம். பி. செனட்டர்டொறிக் டி சூசா, சரத்முத்தெட்டுகம, வால்டர் ஜினசேன ஆகியோரும் புரட்சிவாத கம்யூனிஸ்ட் கூட்டத்தில் திரு. ஹிக்கொ தர்மசேன, திரு. இளங்கிரன் ஆகியோரும், தமிழரசுக் கூட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம் திருச்செல்வம் கியூ. ஸி., அ. அமிர்தலிங்கம் எம். பி ஆகியோரும் விசேஷமாகக் கலந்து கொள்ளவிருக்கின்றுர்கள்.

[கா. நி.]

## மலேரியா

புலோலி, திங்கள்

பருத்தித்துறைப் பகுதியில் மீண்டும் மலேரியா தனது செல்வாக்கைக் காட்டத் தொடங்கியுள்ளது. இதனால் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வவனியாப் பகுதியிலிருந்து பரவத்தொடங்கிய இந்த நோய் தற்போது பருத்தித்துறைப் பகுதியில் பெருந்தொகையானவர்களைப் பீடித்துள்ளது.

## பொது விளையாட்டு...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மைதானம் ஒன்று இல்லாததும் கடந்த மூன்று வருடகாலமாக உதைபந்தாட்டப் போட்டிகளும் மற்றும் விளையாட்டுகளும் நடைபெருததும் குறிப்பிடத் தக்கது.

## திருமணம்

கோண்டாவில் மேற்கு திருமதி சுப்பையா அவர்களது புதல்வர் புண்ணியலிங்கம் (ஆசிரியர் - கோப்பாய் மகாவித்தியாலயம்) அவர்களுக்கும் திரு. பொன்னுத்துரை அவர்களது புதல்வி தர்மலட்சுமி அவர்களுக்கும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் சனிக்கிழமை (4-5-1968) காலை 10-12 மணிக்கும் இடையேயுள்ள சுபவேளையில் திருமணம் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் அன்போடு அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை. 1455

## வாடகைக்கு

கடை

சகலவித தளபாடங்களுடன் கூடிய கடை ஒன்று சுன்னுகம் பிரதான வீதியில் வாடகைக்குக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு A சிவசம்பு, பிரதானவீதி, சுன்னுகம். 1531

...க்கே "ஈழநாடு" லிமிட்டெட் ...
...ப்பாணம் சிவன் கோவில் மேல வீதி 68-ம்
...ள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம்
...ரல் 30-ம் தேதி ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org